உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# சீகாளத்திமான்மியம்.

இஃது,

திருக்கைலாசபரம்பரைப்

பொம்ம்புரம்

ஸ்ரீசிவஞானபாலையதேசிகராதீனத்துச்

சிதம்பரம்

இராமலிங்கசுவாமிகளால்,

பாளையம்

சோமசுந்தரசெட்டியாரவர்கள்

வேண்டுகோளின்படி

பலருக்கும்பயன்படும்பொருட்டு

வசனரூபமாகவியற்றி,

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சர்வதாரி௵ கார்த்திகை௴

Registered Copyright.

Q23:38.21622SK
M89

856/261-1-1889

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# சீகாளத்திமான்மியம்.

இஃது,

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மபுரம்

ஸ்ரீசிவஞானபாலையதேசிகராதீனத்துச்

சிதம்பரம்

இராமலிங்கசுவாமிகளால்,

பாளையம்

சோமசுந்தரசெட்டியாரவர்கள்

வேண்டுகோளின்படி

பலருக்கும்பயன்படும்பொருட்டு

வசனரூபமாகவியற்றி,

சென்னை:

மிமோரியல்அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சர்வதாரி௵ கார்த்திகை௴.

Registered Copy-right.

261/1-89

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# *சீகாளத்திமான்மியம்.

## காப்பு.

தருமஞ் சந்திகழ் தாமரை யோன்பதங்
கருமஞ் சந்தி கடுப்பவர் வாழ்பதக்
திருமஞ் சந்திரற் றேய்திருக் காளத்தி
வருமஞ் சந்தி மழைமத யானையே.

## விடசங்கமச்சருக்கம்.

தொண்டைநாட்டிலே, நாராயணபுரத்திலே, யாதவ மஹாராஜா என்பவர் ஒருவரிருந்தார். அவர் அரசகுலத்திலேயவதரித்து, அதற்குரிய சகலகலைகளினும் அதிவல்லராகி, குருலிங்கசங்கமங்களினிடத்துப் பேரன்பும் பிறவுயிர்களினிடத்துப் பெருங்கருணையும் உடையராய், அந்நாட்டிலே அநீதிகலவாவண்ணம் அரசுசெலுத்திவந்தனர். அக்காலத்திலே கயாரணியமெனவும், வில்வாரணியமெனவும், தென்கைலாயமெனவும், சீகாளத்தியெனவும் பெயர்பெற்று விளங்கும் திவ்வியதலத்திலே, திருவருளையே திருமேனியாகக் கொண்டு வீற்றிருக்கும் சிவபெருமான் அவ்வரசர்பெருமானது சிவபுண்ணிய முதிர்ச்சியை நோக்கி ஆட்கொண்டருளத் திருவுளங்கொண்டு, விபூதி ருத்திராக்ஷம் சிவலிங்கதாரணமுதலிய சின்னங்கள் விளங்க, விடசங்கமத்திருவுருவந்தாங்கி, அந்நாராயணபுரத்திலுள்ள மங்கையர் பலரும்

* ஸ்ரீகாளாஸ்தி என்பது சீகாளத்தி எனத்திரிந்தது.

காதலித்துச்சூழும்படி வீதியிலெழுந்தருளினார். அத்தருணத்திலே, அவ்வரசர்பெருமானுக்கு போஜனவேளையில் கலந்திருத்திவைக்கும் சிற்றேவலையுடையவளாயிருந்தும், அடியவர்பத்தியில் மிகச்சிறந்த ஒருபெண் அவரைஎதிர்ப்பட்டு, பலமுறைபணிந்தெழுந்து, "ஐயனே, அடியேனது சிறுகுடிலுக்கெழுந்தருளித் திருவமுதுகொண்டு பரிகலசேடமளித்து, எனதுதீவினையைச் சேதித்தருளல்வேண்டும்." எனப்பிரார்த்திக்க; விடசங்கமேசர் திருவுளமிரங்கி, அவளிடத்திலே விரகமுடையவர்போலக்காட்டி, அவள்மனையையடைந்து, திருவமுதுகொண்டருளி, தாம்பூலந்தரித்து, கலவியின்பத்தைக் காதலித்தவர்போல நடித்துக்கொண்டு கலந்திருந்தனர்.

அப்பெண் அவரது மாயவிஞ்சையையுணராது மயங்கி, காமவசத்தளாய் அரசர்கோமானது குற்றேவலை மறந்திருப்ப; அவர் ஸ்நானஞ்செய்து நியதிமுடித்து, தியானத்திருந்தபின் கலந்திருத்திவைப்பவ ளில்லாமையைக் கேள்வியுற்று, கனல்பெருகக் கண்கள்சிவந்து, காவலரைத்தூண்டினர். அவர் கடுகிநடந்தழைத்தமையால், அவள் மருண்டெழுந்து, சங்கமேசரைத் தன்மனையிலிருக்கும்படிப் பிரார்த்தித்து நிறுத்திவிட்டு, விரைந்துவந்துநிற்க; அரசர்பெருந்தகை முனிந்து, அவள்கூந்தலைக் களைந்துவிடும்படி கட்டளையிட்டனர். அவ்வாறே காவலர்முடித்தலால், அவள் கண்டவரிரங்கக் கவலையுற்றுச்சென்று, சங்கமேசரது திருவடியிலேவீழ்ந்துமுறையிட்டு, அவரால் அபயாஸ்தமளித்துச் சிரசிலே திருக்கரஞ்சூட்டப் பெற்றமையால், முன்புபோலவே கூந்தல்செழித்துவளரக் குதூகலமுடையவளாகி, அவரை வணங்கி விடைபெற்று, மீண்டுவந்து நிற்க; அதுநோக்கிய அரசர்குரிசில் நமதாஞ்ஞையின்படி இவள்கூந்தலைக் களைய

வில்லையெனக் கடுங்கோபங்கொண்டு, பின்பு உண்மையையறிந்து பெருவியப்புடையவராய், அப்பொழுதே அவன் மனையையடைந்து, அங்குவீற்றிருக்கும் சங்கமேசரது அற்புதத்திருமேனியைக் கண்டவுடனே பலகால்வணங்கித் துதித்து, பயபத்தியோடுநின்று, "எம்பெருமானே, தேவரீர் வீற்றிருத்தற்குத் தவஞ்செய்த நாடு யாது? இனி எழுந்தருளுதற்குத் தவஞ்செய்யும் தேசம் யாது?" என விநயத்தோடு வினவினர்.

அதுகேட்ட அண்ணலார் "யாம் சிவஸ்தலங்கடோறும் வசிப்பேம்; தற்காலம், எத்தலங்களினும் மிகவுயர்ந்தது தென்கைலாயமெனத்தேர்ந்து அத்தலத்தையடைந்தேம்; அங்கே நம்பெருமானமர்தற்கு ஆலயமின்மைகண்டு, அப்பெருமானை நோக்கி, உலகமெலாமுடையவுமக்கு வீற்றிருக்க ஓராலயம் அமைக்குமன்பர் இல்லைகொல்லோ! என இரங்கி வந்தேம்: ஆகையால், சிவபத்தியிற்சிறந்த நீயே அத்திருப்பணியை முடிக்கக்கடவை." என வற்புறுத்தியருள; அதுகேட்டு அவர் அடியேனுய்யுமாறு அத்தலமான்மியத்தை விரித்தருளவேண்டுமென விண்ணப்பஞ்செய்துகொண்டனர். சங்கமேசர் "அன்பனே, அத்தலத்திலே சித்திபெற்றோர் வசிட்டமுனிவர் அகத்தியமுனிவர் பிரமதேவர் சிலந்தி பாம்பு யானை கண்ணப்பநாயனார் சிவகோசரியார் நக்கீரதேவர் கன்னியரிருவர்முதலாக அளவிறந்தோருண்டு; அவ்வச்சரித்திரங்களைச் சொல்லத்துணிந்தால் பலயுகஞ்செல்லும்; ஆதலால், அவற்றுள்ளே சில சரித்திரங் கூறுகின்றோம்: மன்னமர்ந்து இனிதுகேட்பாயாக." என்று கூறத்தொடங்கினர்.

விடசங்கமச்சருக்கமுற்றிற்று.

## தென்கைலாயச்சருக்கம்.

சிலயுகங்களுக்குமுன்னே, சூரியகுலத்திலுதித்த மித்திரசகனென்னுமரசனை வஞ்சிக்கவெண்ணிய ஓரரக்கன் அவ்வரசனிடத்தே மடைத்தொழில்பூண்டிருக்குநாளில், நரமாமிசத்தைச் சமைத்துவைக்க; அதை அரசனுணராது வசிட்டமுனிவருக்குப்படைத்து, அக்குற்றங்காரணமாக அம்முனிவராற் சபிக்கப்பட்டு உதிரனென்னும் பெயரையுடைய அரக்கனாகி உழன்றிருந்தான். அக்காலத்திலே, விசுவாமித்திரமுனிவர் வசிட்டமுனிவர்பால் வைத்திருக்கும் உட்பகையினால் அவர்சந்ததியை அழிக்கத்துணிந்து, சத்திமுனிவர்முதலிய நூற்றுவரையும் மாய்த்துவிடும்படி அவ்வுதிரனென்பவனுக்குப் பணிக்க; அவன் அவ்வாறே முடித்தலால், வசிட்டமுனிவர் புத்திரசோகமேலிட்டு, தமது உயிரை விடுக்கவெண்ணி, ஒருமலையினது உச்சியிலேறி, விரைந்து விழுந்தனர். அதுகண்ட பூதேவியானவள் அவரிறவாவண்ணம் தன்னுடைய இரண்டுகரங்களாலும் தாங்கிக்கொண்டு, அவரைநோக்கி, "முனிவனே, நீ இவ்வாறு செய்தலால் உனது துன்பம் நிவர்த்தியாகுமா? சிவபெருமானை வழிபட்டுத் திருவருளைப்பெறுவையேல், இத்துன்பம் நிவர்த்தியாகப்பெறுவதுமன்றி முத்தியையும் பெறுவாய்." என்றுரைக்க; முனிவர் அதையங்கீகரித்து, தமது சித்தத்திலே கயாரணியமே எவற்றினும் சிறந்ததலமெனத்துணிந்துசென்று, ஒருசிறந்ததானத்திலே யிருந்துகொண்டு, உணவாதிகளை விடுத்து, ஐம்புலன்களையு மடக்கி, சித்தத்தைச் சிவபிரான் திருவடிக்கண்ணேபதித்து, எவற்றாலும் சலிப்பின்றி, அருந்தவம் புரிந்துகொண்டிருந்தனர்.

சிவபெருமான் திருவுளமிரங்கி, ஐந்தலையரவ வுருவத்தோடு பரசிவலிங்கமாய் மேற்குத்திருமுகமாகி, சோதிமயமாய்த் தரிசனந்தந்தளிக்க; முனிவர் நடுநடுங்கி, மயிர்சிலிர்த்து, காற்றினாற்பெயர்க்கப்பட்ட மரம்போல வீழ்ந்துபணிந்து, அக்கடவுளெழுகவென்றபின்னர் பயமகன்றெழுந்து, பலவாறு துதித்துநின்றனர். அப்பெருமான் திருவருள்சுரந்து, முனிவரைநோக்கி, "உனக்கு வேண்டியவரம் யாது?" என்வினவ; அம்முனிவர் "தேவரீர் எக்காலத்தும் இத்தலத்திலே இத்திருமேனியோடு வீற்றிருந்துகொண்டு ஆன்மாக்களுக்கு இஷ்டசித்திகளையளிக்கவும், சிறியேனுக்கு ஞானோபதேசம் பாலித்தருளவும் விரும்பினேன்" என விண்ணப்பஞ்செய்துகொண்டனர். அக்கடவுள் அவ்வரமளித்து, கல்லாலவிருக்ஷத்தடியிலே தக்ஷிணாமூர்த்தமாய் வீற்றிருந்து, பதிபசுபாசலக்ஷணங்களை ஐயந்திரிபற விளக்கியருள; அம்முனிவர் உண்மைதெளிந்து, ஞானமுதிர்ச்சியுடையராகி, பேரின்பம்பெற்றனர்.

அத்தலத்திலே, அக்கடவுள் 'அம்முனிவர்க்கருளியவண்ணமே எழுந்தருளியிருத்தலால், உமாதேவியாரும் பிரிவாற்றாது, விநாயகக்கடவுள் முருகக்கடவுள் வீரபத்திரக்கடவுள் வைரவக்கடவுள் ஐயனார் நந்திதேவர் உருத்திரகணங்கள் கணநாதர்கள் முதலியோர் பின்றொடர்ந்துவர, அத்தலத்தையடைந்து, ஞானப்பூங்கோதையம்மை என்னும் திருநாமத்தோடு தங்கியிருந்தனர். 'இதுகண்ட கைலைமலையானது மேருமலையோடு, தானும் பிரிவாற்றாது அங்கடைந்து, தனக்கு வடக்கே அம்மேருமலை தங்கும்படி தான் சந்நிதிக்குக் கீழ்த்திசையிலே தங்கியது. அதனால், அன்றுமுதலாக அத்தலம் தென்கைலாயமெனத் திருநாமமு

டையதாகி, அண்டருலகமுமழியும் அக்காலத்தும் அழிவில்லாததாய், திகரின்றிவிளங்குகின்றது. அத்தலத்திலிருக்கும் சராசரங்களெல்லாம் சிவரூபமாகும்: என்றுணாத்தருளி, அவ்வரசர் வேண்டுகோளின்படியே, பொன்முகரிநதியின்வரலாற்றைப் புகலத்தொடங்கினர்.

தென்கைலாயச்சருக்கமுற்றிற்று.

---

## பொன்முகரிச்சருக்கம்.

---

சிவபெருமான் பார்ப்பதியைத் திருமணமுடித்தற்பொருட்டு, காலாக்கினியுருத்திரர், கூஷ்மாண்டர், ஆடகேசர், வைரவர், வீரபத்திரர், ஐயனர், ஏகாதசருத்திரர், புத்தியட்டர், அட்டமூர்த்திகள், குண்டோதரர்முதலிய கணத்தலைவர்களும், பிரமவிட்டுணுக்களும், இந்திரன்முதலிய தேவகுழாங்களும், அகத்தியர் காசிபர் கௌதமர் பாரத்துவாசர் வசிட்டர் விசுவாமித்திரர்முதலிய முனிபுங்கவர்களும், நந்திதேவர்முதலிய பரிசனங்களும் புடைசூழ்ந்துவரவும், விநாயகக்கடவுள் பூதகணங்களோடு முன்னேசெல்லவும், இடபவாகனத்திலெழுந்தருளி, மங்கலவாத்தியமுழங்க, பர்வதராஜன் எதிர்கொண்டுபணிய, இமயமலையை யடைந்து, அவரவரையும் தக்கவாறிருக்கும்படிபணித்து, சிங்காசனத்தில் வீற்றிருந்தருளினர். அங்கே எவ்வுலகத்தினுமுள்ள கணங்களெல்லாம் ஒருங்குநெருங்கலால், தென்பூமியுயர்ந்து வடபூமிதாழ்ந்ததாக; அப்பெருமான் அகத்தியமுனிவரை அருகழைத்து, அருட்பார்வையளித்து, "மாதவனே, இப்பூமியானது சமப்படும்படி நீசென்று, பொதியமலையிலே தங்

கவேண்டும்; அல்லையேல், நாமே நொடிக்குள்ளே செல்லல் வேண்டும்." என்று கட்டளையிட்டருளினார்.

[illegible] முனிவர்வணங்கி, வாய்புதைத்துநின்று, "கருணையங்கடலே, திருமால்முதலிய தேவர்கள்நிற்கவும் நாயிற்கடையேனிடத்துவைத்த திருவருட்பெருக்கினாற் பணித்த ஏவலை அத்திருவருள்கொண்டுமுடிப்பேன்." என மீட்டும்வணங்கி, * விடைபெற்று, தமதுமனைவியாகிய உலோபாமுத்திரையோடு புறப்பட்டு, திருக்கேதாரம் காசி விருபாக்ஷம் தாக்ஷாராமபுரம் நந்திபருப்பதமுதலிய தலங்களைத்தரிசனஞ்செய்துகொண்டு, வரும்வழியிலே, தென்கைலையெதிர்ப்பட, ஆராமையால் நமஸ்கரித்துக்கொண்டு, பசுவைக்கண்டுபாய்ந்தோடும் கன்றுபோல நாகலிங்கப்பெருமான் சந்நிதியை விரைந்தடைந்து, நெஞ்சநெக்குருக, கண்களிலே நீராறுதொழுக, புளகமுற்று, கரங்களைக்குவித்துக்கொண்டு நெடுநேரம் பரவசப்பட்டுநின்று, தெளிந்து, பலவிதமாகத்துதித்துநீங்கி, தக்ஷிணாமூர்த்தி ஐஞ்சந்திவிநாயகர் முருகக்கடவுள் ஞானப்பூங்கோதையம்மைமுதலிய மூர்த்திகளைத் தரிசித்து, பலதரம்வலம்வந்து, தர்க்கமலையிலேறி, அத்தேவியையும் தரிசனஞ்செய்து திரும்பினார்.

பின்பு அவ்விடத்திலே விளங்கித்தோன்றும் அதிசயங்களனைத்தையுங்கண்டு, பேருவகையுற்று, இவ்விடத்திலே நதியொன்றில்லாமையே குறையெனத்துணிந்து, ஆங்குவசிக்கும் அருந்தவமுனிவர்பாற்போய், "சுவாமிகாள், இத்தலத்திலே நதியொன்றழைக்கும்படி எனக்கருளுவீராக." என

* இம்முனிவர் திருமணக்கோலமகோற்சவம் தரிசிக்கப்பெற்றோமில்லையே எனவருந்தி சிந்தித்ததலங்கடோறுங்காட்டியருளப்பெற்றமை அவ்வத் தலபுராணங்களுட் காண்க.

ப்பிரார்த்தித்து, அவர்களுடைய பூரணகிருபையைப்பெற்று, அத்தலத்திற்கு நான்குயோசனை தூரத்திலே நிருதிதிக்கிலுள்ள ஒருமலையிலேறி, உணவனைத்துந் துறந்து, வேனிற்காலத்திலே பஞ்சாக்கினிமத்தியிலும், மழைக்காலத்திலும் பனிக்காலத்திலும் வாயளவுஜலத்திலுமிருந்துகொண்டு, பஞ்சேந்திரியங்களையுமடக்கி, சிவபிரானைக்குறித்துச் செயற்கரியமாதவம் செய்துகொண்டிருந்தனர். அதுகண்டஞ்சிய இந்திரன்முதலியோர் முனிவர்கருத்து யாதோவெனக் கலக்கமுற்று, பிரமதேவனையடைய; அவரும், தெளியாதுஐயுற்று, அவர்களோடு கைலையைச்சேர்ந்து, நந்திதேவரருளால் சிவபெருமான்சந்நிதியை அணுகி, திருவடிகளிற்பலமுறைதாழ்ந்து பரவிநின்று, முனிவரதுநிலைமையை விண்ணப்பஞ்செய்தனர். அக்கடவுள் அவரைநோக்கி, "அகத்தியன் நமது தென்கைலைக்கு நதியொன்றையேவிரும்பி நற்றவம் புரிகின்றான்; அவன்பொருட்டு ஆகாயகங்கையை விடுப்பேம்; நீமுற்சென்று அதனையளிப்பாயாக." என்று ஆஞ்ஞாபிக்க; அவ்வாறே வந்துநின்றபிரமதேவனை முனிவர்வணங்கி, தமதுகருத்தையறிவித்தனர்.

உடனே அப்பிரமதேவர் ஆகாயத்தைநோக்கி, அங்கு நின்றும்வந்தகங்கையானது பொன்னிறத்தோடுமுழக்கத்தையும் உடையதாயிருத்தலால் அதற்கு, "பொன்முகரி" எனப் பெயரிட்டுச்செல்ல; அந்நதியானது அகத்தியமுனிவர் தவஞ்செய்தலால் அகத்தியாசலமென்னும் பெயர்பெற்ற அம்மலையினின்றுமிழிந்து, திருவேங்கடம் பரசுராமேச்சரம் என்பவற்றினருகேசென்று, சீகாளத்தியென்னும் திருமகளுக்கு ஆரம்போலச்சிறந்து, அக்கினிதிசையாகத்திரும்பி, ஓங்காரமென்னுந்தலத்தையடைந்து, கடலிற்கலந்தது.

அதுநோக்கிய அகத்தியமுனிவர் ஒருபெண் புத்திரப்பேறின்றி மலடியாக நெடுநாளிருந்து அரியவிரதங்களையனுட்டித்து ஓர் புதல்வனைப்பெற்றாற்போலப் பெருங்களிப்படைந்து, அம்மலையினின்றுமிறங்கி, உலோபாமுத்திரையோடு ஸ்நானஞ்செய்து, அந்நதிதீரத்திலே பலசிவலிங்கங்களை ஸ்தாபித்து, பேரன்பினால்வழிபட்டு, நாகலிங்கப்பெருமானைவணங்கிக்கொண்டு, ஒருமலையிலே தங்கியிருந்தனர்.

அங்குள்ளமுனிவர்கள் அவரையடைந்து, "எந்தையே, ஐந்தழலினிடையேநின்று அரிதுநோற்று, பிறவிப்பிணிக்கு மருந்தாக இந்நதியைத் தந்தளித்தீர்; இதனாலே யாங்களுய்ந்தனம்; உம்முடைய திருவருளுக்கு அளவும் உண்டுகொல்லோ? விந்தமலையினது வீறையடக்கினீர்; பெருங்கடல்முழுமையும் ஒருங்குபருகினீர்; தென்பூமியைச்சமமாக்கச் சிவபிரானருளைப்பெற்றீர்; இங்ஙனமாகிய உமதுபுகழை எங்ஙனம் அளவிடுவேம்: யாம் இன்றளவும் ஈண்டுவசிக்கப்பெற்றேமாதலால் உம்மைத்தரிசித்து இவ்வுடம்பின்பயனையுற்றோம்." எனப் பெரிதும் புகழ்ந்துகொண்டாடினார். அகத்தியமுனிவர் அவர்களைநோக்கி, "வேதமுடிபையுணர்ந்த சுவாமிகாள், உங்களுடையதிருவருளினாலன்றோ இந்நதிகிடைக்கப்பெற்றேன்; அன்றேல், சிறியேனுக்கு இதுபெறுதற்குரிய திறமையுமுண்டுகொல்லோ? இந்நதி சிவபெருமானது திருவருட்பெருக்காக இருத்தலால் இதில் ஸ்நானஞ்செய்வோர் முத்தியையடைவர்; கொலையாதிபுரிந்தோரும் மூழ்குவரேல் அப்பாவத்தினீங்கித் தேவராவர்; இதிற்குடைந்த விலங்கு பறவைமுதலிய பிறவுயிர்களும் இயன்றபதவிகளைப் பெறும்; இத்தன்மையுடைய இத்தீர்த்தத்திலே இடைவிடாதுதோயும் புண்ணியம்புரிந்துள்ளீர் [illegible]ா நீங்கள்: அப்புண்

ணியத்தைப் பாவியாகியநான் புரிந்தேனில்லை.” என்று அந்நதியின்சிறப்பைக்கூறி, அவர்கள்பால்விடைபெற்று, ஆரமுதன்ன தீந்தமிழ்வளரும் பொதியமலையையடைந்தருளினார்.

யாத்வம்ஹாராஜனே, பகீரதமன்னனது தவங்காரணமாக வந்தமையால் பகீரதியெனவும், பூமியிலேவருங்கால் சன்னுமுனிவரது யாகசாலையின்வழியாய்வர அம்முனிவருண்டு காதின்வழியாகவிட்டமையால் சானவியெனவும் பெயர்பெற்ற கங்காநதியும், விநாயகக்கடவுள் காகவுருக்கொண்டு சையகிரியையடைந்து இவ்வகத்தியமுனிவரது கமண்டலத்தினின்றும் கவிழ்க்கப்பட்ட காவிரிநதியும், இவைபோலும் பிறநதிகளும் தனக்கிணையாகாவண்ணம், இந்நதியானது சிவபெருமானைநிகர்த்த செந்தமிழ்முனிவர் பலபகலருந்தவம் புரிந்து, பரிந்தழைக்கப்பட்டமையால், ஆன்மாக்களினுடைய ஆணவமலவழுக்கை அகற்றிவிளங்குகின்றது. இங்ஙனஞ் சிறந்த இத்தீர்த்தத்திலும், அத்தலத்திலுள்ள இந்திரதீர்த்தம் மயூரதீர்த்தம் உருத்திரதீர்த்தம் மார்க்கண்டதீர்த்தம் அரகரதீர்த்தம் மோகினிதீர்த்தம் மாகாளதீர்த்தம் பாரத்துவாசதீர்த்தமுதலிய பிறதீர்த்தங்களிலும், சூரியகிரகணம் சந்திரகிரகணமுதலிய விசேடகாலங்களில், ஸ்நானஞ்செய்வோர் பஞ்சாக்கினிமத்தியிலே நெடுநாளிருந்து கடுந்தவம் புரியினும் அடையப்படாத இன்பத்தையடைவர். என்றருளிச்செய்து, அவ்வரசர்வேண்டுகோளின்படியே பிரமதேவர் சரித்திரத்தைக் கூறத்தொடங்கினார்.

பொன்முகரிச்சருக்கமுற்றிற்று.

# நான்முகச்சருக்கம்.

பிரமதேவர் சத்தியலோகத்திலே ஒருபகல் நாரதர்முதலியமுனிவர்களும் இந்திரன்முதலியதேவர்களும் கைகட்டிநிற்கவும், கந்தருவர்கள் யாழிசைபரப்பவும், அரம்பையர் வெண்கவரிவீசவும், பொற்பிரம்பேந்தியகஞ்சுகிகள் முன்னேநின்று இவர் இன்னாரின்னாரென்று காட்டுங்கால் வணங்குபவர்களுக்குத் தக்கவாறு அருள்பாலித்துக்கொண்டு, ஆயிரமிதழ்த்தாமரையாசனத்திலே அரசிருந்தனர். அவ்வேளையிலே, பாற்கடலமுதமும் பனிமதிக்கலைகளும் ஒருருக்கொண்டாலொத்த சரஸ்வதியினது அழகின்பெருக்கை விழிகளாற்பருகி, கரையிலாக்காதற் கடலினுளழுந்தி, அருகுளாரனைவரையு மனுப்பிவிட்டு, அக்கலைமகளை நோக்கி, "எனது நாவமுதே, எனக்கு நின்பாலோங்கிய ஆசையைத்தவிர்க்க நினதுருவொன்றால் முடியாது; ஆகையால் நூறுவடிவம் கொள்வாயாக." என்றுரைத்து, அவ்வாறேகொண்ட வடிவங்களனைத்திலும், ஆலிங்கனமாதி அறுபத்துநான்குகலைகளோடும் கலந்தனர்.

அப்போது யாவருமஞ்ச ஆயுதபாணிகளாய் முப்பதினாயிரம் அரக்கருதித்து, அப்பிரமதேவனைவணங்கி, "தந்தையே, யாங்கள் தீப்பசிதீரும்படி ஏழுதீவுக்களையும் உண்டு ஏழுகடலையும் குடிப்பேமா? மேருவாதியமலைகளை அம்மனையாக ஆடுவேமா? தாரகைக்குலங்களைத் தப்பாதுவிழுங்குவேமா? அட்டயானைகளையும் அட்டநாகங்களையும் அட்டதிக்குப்பாலகர்களையும் வெல்லக்கடவேமா? எங்களுக்கு ஓர் குற்றேவலை இசைப்பீராக." என்றுகேட்க; அதுகேட்ட பிரமதேவர் நாம் பகற்காலத்திலே இம்மங்கையரைச் சேர்ந்ததால் இவரரக்கராக உதித்தனரென[illegible] துணிந்து, அவனை

நோக்கி, "விந்தமலையிலிருப்பீராக." என ஆஞ்ஞாபித்தார். அவர்கள் அங்கடைந்து,இந்திராதிதேவர்முதலியோர்ஏவல் கேட்கக் கொடுங்கோலுடையராகி, முனிவர்தவங்களை முற்றமுருக்கியும், மகளிர்தங்கற்பின் வன்மையைத் தவிர்த்தும், அந்தணர்யாகமனைத்தையுமழித்தும், தேவர்கள்சிறப்பைச் சிதைவுறச்சிதைத்தும், அரசுபுரிந்திருந்தனர்.

அந்நாளிலே, முனிவர்கள் அவர்களாணைக்கஞ்சி, ஒரு நாழிகைக்குள்ளே, நித்தியகடன்களை முடித்துக்கொண்டு சடைகுலைந்தாடவோடி, தனித்தனியவர்களிடஞ்சென்று, இவர்கள் விரைவில் அழியவேண்டுமென்று சிந்தித்துக்கொண்டே, "உங்கட்குச் செல்வம் மேன்மேற்பெருக." என்று வாயால்வாழ்த்தி, நாடோறும் திரிந்துவர; இவர்களோடு வருந்தியுழலும் இந்திரன் ஓர்தினம் பிரமதேவரையடைந்து, வணங்கித்துதித்து, இவற்றையெல்லாமறிவித்தனன். அவர் அதுகேட்டு,மிகவும் கோபித்தவழி, அதினின்றும் உதித்த உக்கிரனென்னும் புதல்வனைநோக்கி, "முதியவரக்கர்களை முன்னவொன்றுகருதாது வதைத்து வானவரைக்காப்பாயாக." என்றுகட்டளையிட்டு, சிங்கம்பூண்ட ஓர்தேரும், அக்கினியாஸ்திரமும் அளித்தனுப்ப; அவ்வுக்கிரன் தந்தைதாயைவணங்கித் தேரிலேறி, இந்திராதியரோத்த, இருடிகள்வாழ்த்த, விந்தமலையைநோக்கிநடந்தனன். அவ்வுக்கிரனது வன்மைகளையெல்லாம் ஒற்றராலுணர்ந்த திவாந்தகன் சயோத்துங்கன் நீலாங்கன் சமரகேசரி அரிலுண்டவன் முதலிய அரக்கர்கள் கோபக்குறியுடையராய், பலவித ஆயுதங்களையும் கைக்கொண்டு, சேனைகள்புடைசூழத் தேரிலேறி யெதிர்த்து, வீராவேசங்கொண்டு, கடுஞ்சமர்புரிய; உக்கிரன் தக்ககணை[illegible]த் தவறாது பொழிந்து, தனித்தனிமா

யித்து, மற்றைச்சேனாதிபதிமுதலிய அரக்கர்மீது அக்கினியாஸ்திரத்தைவிடுத்து, அவரனைவரையும் ஒருநொடியிற்றகித்து, தேவர்கள் பூமழைபொழிய, முனிவர்கள் ஆசீர்வதிக்க, யுத்தகளத்தினீங்கி, பிதாவையடைந்து வணங்கி, "எந்தையே, தேவரீர்பணித்தவாறே யாவரையும் முடித்துவந்தேன்." என்று விண்ணப்பஞ்செய்தனன்.

அதுகேட்டபிரமதேவர் மைந்தர்மடிந்த வருத்தத்தால் மனங்கொதித்துநோக்கியவழி, அவ்வுக்கிரனுமடிந்தொழிய, அவர் பெரிதுங்கலங்கி, அப்புத்திரரையேயன்றி இவனையுமடித்த இப்பாவத்தையொழித்து ஒரு சற்புத்திரனையும் பெறவேண்டுமெனச் சிந்தித்து, தென்கைலைமலையையடைந்து, நாகலிங்கப்பெருமானைத் தரிசித்து; அம்மலைக்கும் நீலமலைக்குமிடையே யிருந்துகொண்டு விடயவுணர்ச்சிகளையகற்றி, அம்பிகைபாகனைக்குறித்து, அரியநோன்புபுரிந்து, அப்பெருமான் தரிசனந்தந்தளிக்கவணங்கி, தங்கருத்தைவிண்ணப்பஞ்செய்தனர். அக்கடவுள் "நான்முகனே, நமது தென்கைலைச் சிகரத்தைத் தெரிசிக்கப்பெற்றோரது தீவினை சூரியகிரணத்தைக்கண்ட இருள்போல நீங்கும்; ஆகலின், நின்து கொலைப்பாவமும் நீங்கிற்று; இனி மாசிமாத மகநக்ஷத்திரத்திலே சூரியோதயகாலையில் பொன்முகரியிலே முழ்கி, இச்சிவலிங்கத்தை நூற்றெட்டுதரம் வலம்வந்து, அத்தனைமுறை நமஸ்கரித்து, அவ்வளவே பஞ்சாக்ஷரத்தையும் உச்சரித்து, மறுமாசிமகமளவும் இவ்வனம் அநுட்டித்துவருவையேல், நற்புத்திரனைப்பெறுவாய்: இது நினக்குமாத்திரமன்று; இவ்வாறே அநுட்டித்தோர் யாவருமே புத்திரப்பேறடைவர்." என்று கட்டளையிட்டு மறைந்தருளினார்.

அவர் மனைவியோடு அவ்வாறே அநுட்டித்து வருங்கால், ஒரு அரிய புத்திரருதிக்க; அப்பொழுது சிவபெருமான் பிரசன்னராகி, ரிபு எனத்திருநாமந்தரித்து, வேதமுடியிற் கூறப்படும் தமது பரிபூரணத்துவத்தை ஐயமறத் தெளியும் தத்துவஞானத்தையும் அநுக்கிரகித்துவிட் டெழுந்தருளினர். அந்த ரிபுவும் மாதாபிதாக்களை வணங்கி, அவரிடத்திலே மிக்க மகிழ்ச்சியோடு விடைபெற்று, வனம் நதி மலை முதலிய சுத்தஸ்தானங்களிலே போயிருந்துகொண்டு, நிதாகரென்பவருக்கனுக்கிரகித்து, அவரைக்கொண்டு சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர் முதலிய முனிவர்களுக்கு தத்துவஞானத்தைப் பாலித்து வீற்றிருக்க; பிரமதேவர் பெருங்களிப்படைந்து, நாகலிங்கப்பெருமானை நமஸ்கரித்துக் கொண்டு தன்னுலகத்தையடைந்தார். ஆதலால், யாதவமகாராஜனே இத்தலம் புண்ணியபூமிகளனைத்தினும் மிகவுயர்ந்தது. என்றுபதேசித்து, அவ்வரசர் வேண்டுகோளின்படியே சிலந்தி பாம்பு யானைகளின் சரித்திரத்தைக் கூறத் தொடங்கினார்.

நான்முகச்சருக்கமுற்றிற்று.

---

## சீகாளத்திச்சருக்கம்.

முற்சென்ற கிரேதாயுகத்திலே, ஒரு சிலந்தி பூர்வஜன்ம வுணர்ச்சியால் பொன்முகரியிலே ஸ்நானஞ்செய்து தென்கைலாயப்பெருமானை வழிபடச்சிந்தித்து, அன்பினது முதிர்ச்சியால் வயிற்றிலிருந்து வளர்கின்ற நூல்களையெல்லாம் வாயினாலே இழைத்து இழைத்து அவற்றினால் மதில்

கோபுரம் மண்டபம் மாளிகை கருப்பக்கிருக முதலியவைகள்செய்து, நாடோறும் இனைப்பாறுதற்குத் தினைப்பொழுதுமில்லாமல், அறுபட்ட இடங்களை முன்போலவே புதுக்கிக்கொண்டிருந்தது. அப்பொழுது பெருமான் அதனது அன்பைச் சோதித்தற்குத் திருவுளங்கொண்டு, முன்னெரியும் தீபத்தைச் சுடர்விட்டெழும்படிசெய்து, ஒருநொடியிலுள்ளே அவ்வாலயத்தைத் தகித்தருள்; அதைநோக்கிய அச்சிலம்பியானது "அந்தோ! அந்தோ!! இத்திருக்கோயிலானது அக்கினிபற்றி யழிந்தது யான் முற்செய்ததீவினையோ! எனதுயிர்த்துணைவராகிய எம்பெருமானுக்கு இப்புல்லிய ஆலயத்திலே விருப்பமில்லாமையோ! யானடியேன். இவ்வாறழிதற்கோ அனேகநாளாக வருந்தி அர்த்தயாமத்திலும் நித்திரையின்றிச்செய்தேன். இப்பெருமான் எளியேனிடத்துவைத்த திருவருளும் இவ்வளவுதானோ!" என்றுபுலம்பி, எம்பெருமான்கோயிலழிந்தும் யான் உயிரோடிருப்பது தகுதியன்றெனக்கருதி, விளக்கிலே வீழ்ந்திறக்கும்படித் துணிந்தெழுந்தது. அதையுணர்ந்த அருட்பெருமான் வெளிப்பட்டு,விளக்கில்விழாவண்ணம் விலக்கி, "சிலந்தியே, நினதுவிருப்பம் யாது?" எனவினவி, அதனதுவேண்டுகோளின்படியே வேதமுடிவையுணர்ந்த மெய்த்தவர்களுக்கும் கிடைத்தற்கரிய திருவடியிலே கலப்பித்தருளினர்.

பின்பு திரேதாயுகத்தினது முடிவிலே ஒருபாம்புநாடோறும் அரிய இரத்தினங்களைக்கொண்டு அப்பரம்பொருளைவழிபட்டுவர; துவாபரயுகத்தின்முதலிலே ஒருயானையும் பரிவோடு பொன்முகரியிலே ஸ்நானஞ்செய்து, துளைக்கையினால் திருமஞ்சனமுகந்துவந்து, அப்பாம்பணிந்த மணிகளனைத்தையும் சிதறத்தள்ளிவிட்டு, அபிஷேகஞ்செய்து, வி

ல்வத்தளிர்களைச்சூட்டிச்சென்றது. மறுநாள் சூரியோதயத்திலே பாம்புவந்து அத்தளிர்களைக்கண்டு "அன்னே! அன்னே!! திருமுடியிலே ஒளிபெற்றமணிகளைச்சிதறச்செய்து இலைக்குப்பையை ஏற்றினவர் யாவரோ அறியேன்." என இரங்கிப் பூசித்துநீங்க; பின்னே யானையடைந்து, அம்மணிகளைக்கண்டு, "ஐயோ! யான்சூட்டிய பசிய மெல்லிய தளிர்களையும் மலர்களையும் அகற்றி பலகற்களையிட்டுவைத்த கொடியவர் யாவரோ உணரேன்." என்றுகலங்கி; அப்பரமனைப் பூசித்தகன்றது. மற்றைநாளிலேபாம்புவந்து, அவ்விறைவனது திருமுடியிலே பத்திரபுஷ்பங்களைக் கண்டவுடனே மிக அயர்ந்து, ஆ ஆ! சிறிதுமெண்ணாது இம்மணிகளைச்சிதறி இக்கொடுஞ்செய்கைபுரிந்தோர் என்றுபகைவரே. இதுசெய்தும் பிழைத்துச்சென்றனரோ! அவரைக்காண்பேனாயின் விஷப்பற்க ளழுந்தும்படிக் கவ்விக்கவ்வி உயிர்குடியேனோ! இது முதல்வனுக்குடன்பாடோ!" என்றேங்கி, நாளை யெல்லாங் காண்பேமென்று நம்பிரானைப்பூசித்துச்செல்ல; யானைவந்து அவ்வரவமணிகளைக்கண்டு, பூமியிலே நெடியகையைமோதிக்கொண்டு வீழ்ந்துபுலம்பி, "எந்தாய், இது நினக்குத் திருவுளமோ? இக்கற்களை எல்லாம் தாமரை குவளை வில்வமாகத் தரித்திரோ? இவற்றை எவ்வாறு பொறுத்திருந்தீர்? ஆ ஆ! தேவரீரும் பகைவர்பக்ஷமாக இருந்தால், எனக்குத் துணை யாவர் யாவர்? பகைவரையுங்கண்டேனில்லை:" எனத்துக்கித்து, "யான் எவ்விதத்திலும் நாளை என்பகைவரைக் கொல்வேன்; அல்லது சாவேன்." என்று நிச்சயித்துக்கொண்டு அண்ணலைப் பூசித்தகன்று, அன்றிரவு முழுதும் நித்திரையின்றி விடியற்காலவரவை நோக்கியிருந்தது.

அரவமும் இவ்வாறே சிந்தித்துக்கொண்டு நித்திரையின்றியிருந்து, சூரியனுதிக்குமுன்னமே சந்நிதியை யடைந்து, அப்பரமன் முடியிலே சூட்டப்பட்டிருக்கும் பூங்கொத்திலே உடலைச்சுருக்கிக்கொண்டு, பகைவனைக்காண வேண்டுமென்று எண்ணியிருந்தது. யானையும் விரையவந்து, பத்திரபுஷ்பங்கள் தான்சூட்டியபடியே யிருத்தல்கண்டு மனங்குளிர்ந்து, "சிவபெருமான் என்பூசைக்கு இன்றுதான் திருவுள மகிழ்ந்தார்போலும்." என்று களிப்படைந்து, பின்பு பொன்முகரியிலே மூழ்கி திருமஞ்சனமுகந்துவந்து, விமலர திருமுடியிலிருக்கும் பத்திரபுஷ்பங்களைக்கையாற்றள்ள; அவற்றில் மறைந்திருந்த அரவஞ்சீறி, அக்கையிலுள்ள துவாரத்தின்வழியாக மத்தகத்திற் புகுந்து குடைந்தது. யானைசகியாது ஊழிக்காலத் திடிபோலமுழங்கி, நீரை முகந்து முகந்து விசையாக வீசிவீசிக் கைசோர்ந்து, அதன்பின்னர் பூமியிலே புழைக்கையை மோதியும், உதிரஞ்சோர மத்தகத்தையுரிஞ்சியும், மரங்கள்பெயரத் தலையிற்பாய்ந்தும், அக்குடைவு தீராமையால், "நம்முடைய பகையையுங்கொன்று நாமும் இறப்பேம்." என்ச்சிந்தித்துச் சினம்பெருகி, துளைக்கையை முடக்கிக்கொண்டு, பூமியுமதிரும்படி பின்பெயர்ந்துபாய்ந்து, தலைபிளந்து வீழ்ந்தது. அரவமும் மெய்நுறுங்கியது. அவ்விடத்திலே உமாபதியார் தேவியாரோடு விடைமேற்றோன்றி, தரிசனந்தந்து, அவ்விரண்டற்கும் சாரூபமளித்து, உடன்கொண்டுசென்றனர். இம்மூன்றும் முத்தியடைந்தமையால், அத்தலத்திற்குச் * ஸ்ரீகாளத்தியென்னும் திருநாமமுண்டாகியது. என்றருளிச்செய்து, அவ்வரசர் வே

* ஸ்ரீ - சிலந்தி; காளம் - பாம்பு; அத்தி - யானை.

ண்டுகோளின்படியே கண்ணப்பநாயனார்சரித்திரத்தைக் கூறத்தொடங்கினார்.

சீகாளத்திச்சருக்கமுற்றிற்று.

## கண்ணப்பச்சருக்கம்.

பொத்தப்பிநாட்டிலே, உடுப்பூரிலே, வேடர்களுக்கரசனாக நாகனென்பவனொருவனிருந்தான். அவன் தத்தையென்னு மனைவியோடு வாழ்ந்திருக்குநாளிலே, புத்திரப்பேறின்மையால் நற்கதியின்றென மனைவியோடுவருந்தி, அதுகாரணமாக, குறிஞ்சிநிலத்திற்குரிமைபூண்டு தமது வழிபடுதெய்வமாய்விளங்கும் முருகக்கடவுளுக்கு இயைந்த ஆலயமொன்றியற்றி, நித்தியநைமித்திகங்களை நியமித்து, மயில்களையும் சேவல்களையும்விடுத்து, திருவிழாச்செய்வித்து, *வேலன்மேற் சன்னதங்கொள்விக்க; முருகக்கடவுள் அவனிடத்தேதோன்றி; "அன்போடுசெய்த இச்சிறப்பிற்கு மகிழ்ந்தேம்; உலகமெல்லாம்புகழும் ஓர்புத்திரனைத்தருவேம்." என்றநுக்கிரகித்து, மறைந்தருளினார். அதுகேட்டநாகன் மனைவியோடு நனிமகிழ்ந்து, அவ்வேலனுக்கும் சுற்றத்தாருக்கும் மிகுசிறப்பியற்றி வாழ்ந்திருந்தனன். அந்நாளிலே, அக்கடவுளருளியபடி ஒரு அரியபுதல்வருதிக்க; நாகன் தத்தையோடு சாலவுவந்து, முருகக்கடவுளுக்கு விசேஷபூசையாதி நடத்துவித்தனன். அப்பொழுது நகரமுழுமையும் எண்ணெயாட்டணிநிகழத் தத்தையென்பவள் அப்புதல்வருக்கு வாசநீராட்டி, முலைப்பால்பெய்து நிலந்தேய்த்து நுதற்பொட்டணிந்து, பாலூட்டி, அலங்கரித்துக்கொடுக்க; நாகன் கை

* வேலன் - வேல்கொண்டுதிரியும் வெறியாட்டாளன்.

யிலேதாங்கி, திண்ணென இருந்தமையால் அப்புதல்வருக்குத் திண்ணனெனத் திருநாமந்தரித்தனன்.

திண்ணனார் தொட்டிலுதைந்து தவழ்ந்து, குறுநடைபயின்று, தெருவிலே சிறுதேருருட்டிவிளையாடியும், சிறிய வில்லம்புகைக்கொண்டு, சிறூர்களோடு காட்டிற்புகுந்து மான் புலி கரடி முதலிய விலங்கின்குட்டிகளுள்ளே சிலவற்றையெய்தும், சிலவற்றைக்கைக்கொண்டுவளர்த்தும், வளர்ந்துவந்தனர். அக்காலத்திலே, நாகன் வில்வித்தைகற்பிக்கும் பருவம்வரக்கண்டு, அத்தேசத்து வேடர்களையெல்லாம் அழைப்பித்து, வில்விழாநடாத்தி, பூர்வாசிரியனுக்கு வேண்டியவைகளை வெறுக்கக்கொடுத்து, "இவ்விளையோனுக்கு வில்வித்தையை அன்போடு கற்பிக்கவேண்டும்." எனப்பிரார்த்திக்க; அவன் நல்லமுகூர்த்தத்திலே, கிரமப்படி நற்சிலை பிடிப்பித்தனன். திண்ணனார் பிடித்தவுடனே வில்வித்தையனைத்து நிரம்பி, "வில்விஜயனே வேட்டர்குலத்தி லவதரித்தானே!" என்று யாவருங்கூறும்படி அதிவல்லவராகியிருக்க; நாகன் இளவேட்டஞ் செய்விக்கவிரும்பி, அதனை இடையூறின்றி முடித்தற்பொருட்டு வனதேவதைகளுக்குப் பலிகொடுக்கவேண்டுமெனக்கருதி, வேடர்களோடு வனத்தையடைந்து, நீராடி பூக்கொய்துசென்று, அவ்வனதேவதைகளிருக்கும் ஆலமரத்தை யலங்கரிப்பித்து பூசைசெய்வித்து, குங்குலியதூபத்தைக் கானகமுழுமையுங் கமழ்வித்து, கடாக்களைப்பலியீந்து; பிரசாதம்பெற்று உடுப்பூரையடைந்தான்.

மற்றைநாளிலே, மைந்தனையழைத்து, "ஐயனே, இன்றுமுதலாக, நீயே மறவர்களுக்குத் தலைவனாகி, பகைவரையழித்து அவர்நிலங்கவர்ந்து, வெற்றிபெற்று, பெரிதுவாழ்

வாயாக." என்றாசீர்வதித்து, வழிவழிவந்த வெற்றிச்சிலை யைக்கைக்கொடுத்து, தழிபெருங்காதலால் தோள்குழைய த்தழுவி, "நமது முருகக்கடவுளது திருவருளே துணையாகச் சென்று இளவேட்டம் வாய்த்துவருக." எனவிடையளிக்க; திண்ணனூர் தந்தையைவணங்கி தாயைப்பணிந்தனர். அவள் எடுத்தப்புல்லி, முலைப்பால்சோர, நெஞ்சுகுழைய, உச்சி மோந்து, "மகனே, நீ கடுங்காட்டிலே நுழையாமல் தண் ணிய சோலைவழியாகவேசென்று வேட்டமாடி முட்கிறலும் திருஷ்டிதோஷமுமில்லாமல் வேடர்களோடு திரும்புக." என்று நெற்றியிலே விபூதி தரித்தனள். திண்ணனூர் மீண்டு ம்வணங்கி, அநுமதிபெற்றுநீங்கி, கச்சிறுக்கி, உடைவாளுங் கட்டி, வில்லம்புகைக்கொண்டு, வேடர்கள்புடைசூழ வேட் டைநாய்களோடு காட்டையடைந்து, பலவிலங்குகளும் பு யிலுமிடமறிந்து, வலைகட்டி பறைமுழக்கி, அவைகளை உள் ளே நுழைவித்து, காடுகளைவெட்டிச்சரித்து, பார்வை மிருக ங்களினது ஓசையால் அவையணுகியவழி, மறைந்துநின்று, அம்புமுதலியவற்றாற்கொன்று, வேட்டைமுடித்து ஸஹாய மடைந்தனர்.

இவ்வாறே பலகால்வேட்டமாடி, மாதாபிதாக்கள் மகி ழ வாழுநாளிலே, ஒருநாள் ஒருநெடுங்காட்டிற்புகுந்து, வே டர்களினின்று நீங்கி, தனித்துலாவி, மிகவும் இளைத்து, ஓர் மரநிழலிலே துயின்றனர். அவ்வேளையிலே, சிவபெருமான் வெண்ணீறணிந்து புலித்தோலுடுத்து சடைமுடிபுனைந்த கோலத்தோடு அவரது கனவிலேதோன்றி, "மைந்தனே, இம்மலையிலே, பொன்முகரியாற்றங்கரையிலே, கல்லாலவி ருக்ஷத்தடியிலே, ஒருசிவலிங்கமுண்டு; அது துன்பமனைத்தை யுமழித்து, பேரின்பத்தையளிக்கும்: நீசென்று அதைவண

ங்குவாயாக." என்றுரைத்துமறைந்தருள; உடனே கண்விழித்து ஆச்சரியமடைந்து, திக்கெங்கும் நோக்கிநின்றனர். அச்சமயத்திலே, ஓர்பன்றி வேடரார்ப்பிலெழுந்து வலையையறுத்துக்கொண்டு அதிவேகமாக மலையிலே புகுதற்குச் செல்லுதலைநோக்கி, கடுங்கோபத்தோடு துரத்திச்சென்று, ஆலவிருக்ஷத்தடியிலே, சிவலிங்கத்தினருகே சென்றவுடன் மறையக்கண்டு, அதிவியப்புடையராகி, "அச்சோ! இப்பன்றி மறைந்தது தெரிந்தேயில்லை." என்று குறித்துப்பார்க்குங்கால் எதிரே சிவலிங்கமிருத்தலைக்கண்டனர்.

கண்டவுடனே ஸ்ரீகாளத்தியப்பரது திருவருட்பார்வையை இனிதுபெற்று, தரிசனவேதியினெதிர்ப்பட்ட இரும்பானது அவ்வுருவமாறிப் பொன்னுருவமாவதுபோல் முற்குணங்கள்மாறி, அக்கடவுளிடத்துவைத்த அன்பேயுருவமாயினர். நெடுங்காலம் பிரிந்திருந்துவந்த தன்குழந்தையைக் கண்ட தாயைப்போலத் தாழாமல்விரைந்தோடி, தோள்களழுந்தத்தழுவி, மோந்து முத்தமிட்டார். அழலிடைப்பட்ட மெழுகுபோல நெஞ்சநெக்குருக, கண்ணீர்சொரிய, உரோமாஞ்சங்கொள்ள நின்று, "குருடன்கையிலகப்பட்ட தெய்வமணிபோல இப்பெருமான் எனக்ககப்பட்டனர்." என்று பேரானந்தமடைந்து சிரித்தார். பின்பு "எந்தையே, யானைபுலிமுதலிய விலங்குகள் திரியும் இக்காட்டிலே துணையுமில்லாமல் வேடர்கள்போலத் தனித்திருப்பதென்னே? நீர் அமுதுசெய்தற்கு இறைச்சி யாவர் கொண்டுவந்து கொடுப்பார். எமது ஊருக்கு வருவீரேல் தேன் தினைமா காய் கனி கிழங்குமுதலியவைகளும், மான் முயல் பன்றிமுதலியவற்றின் மாமிசங்களும், யானே கொண்டுவந்துகொடுப்பேன். நல்ல வேடர் துணையுமுண்டு. நீர் இங்கே தனித்திருத்தற்கு

என்மனந்துணியவில்லை. தேவரீர் திருவுளமிரங்கி இப்பொழுதே என்னோடு உடுப்பூருக்கு வருதல்வேண்டும்." என்று விண்ணப்பஞ்செய்தார். இவ்வாறுரைத்தும், இறைவர் ஒன்றும் கட்டளையிடாமையால், "இத்தெய்வசிகாமணிக்கு இவ்விடத்திலிருத்தலே திருவுளம்போலும். சிறியேன் இப்பெருமானைநீங்குவனேல் உயிர்வாழ்வனோ! வாழேன்." என்றுமொழிந்து, உற்றுநோக்குங்கால், அப்பெருமான்முடியிலே அபிஷேகஞ்செய்து நறுமணங்கமழுமலர்களும் வில்வத்தளிரும் சூட்டியிருத்தல்கண்டு, இச்செய்கையே ஸ்ரீகாளத்தியப்பருக்குப் பிரீதியாகும். என்று தெளிந்து, அப்பணியைக் கடைப்பிடித்தார்.

பின்பு "ஐயோ! பெரும்பகலாகியது. இறைவரோ மிகப்பசித்தார். இன்சுவையிறைச்சிகொண்டுவந்து இடல்வேண்டுமென்று நீங்கினால் தீயவிலங்குகள்வந்து யாதுவிளைக்குமோ!" எனநனியிரங்கி, "குன்றிடை எனக்குவாய்த்த குலமணிவிளக்கே, உமது அழற்பசிதணிப்ப மிகுசுவையிறைச்சி கொண்டு தாமதியாமல் ஒருகணத்தில்வருவேன். கொடிய விலங்குகள் வருமென்று அஞ்சவேண்டா. வந்தால் என்னை விரைய அழைப்பீராக." என்றுவிண்ணப்பஞ்செய்து, அரிதினீங்கி, கன்றைவிட்டுப்பிரிந்த தலையீற்றுப்பசுப்போல அடிக்கடிதிரும்பிநின்று, ஐயர்தனிமைக்கேங்கி, காட்டிற்புகுந்து, ஓர்பன்றியைக்கொன்று தானேயேந்தி, பொன்முகரியின்தீரத்தைச்சார்ந்தனர். சார்ந்து, தீக்கடைகோலினால்தீயையுண்டாக்கி, அப்பன்றியைவதக்கி, வாளினாலரிந்து, இனசுவையுடையசெந்தசைகளையெல்லாம் வேறெடுத்து, அம்பிற்கோத்து, பதமுறக்காய்ச்சி, வாயிலிட்டு, பல்லினாலே மெல்லமெல்லப் பலமுறையதுக்கிப்பார்த்து, சுவையுடையஇறைச்சிகளை

யெல்லாம் தேக்கிலையினாற்றைக்கப்பட்ட கல்லையிலேவைத்து, கழிசுவையில்லாதவற்றைப் புறத்திலே உமிழ்ந்தார். அதன்பின்னர் தளிர்களையும் மலர்களையுங்கொய்து தலையிற்செருகி, திருமஞ்சனத்தை வாயிலேமுகந்து, ஒருகரத்திலே அமுதிட்டகல்லையையும், மற்றொருகரத்திலே வில்லம்புகளையும் எடுத்துக்கொண்டு, "ஆ கெட்டேன்! என்னுயிர்த்துணைவராகிய கடவுள் மிகுந்தபசியாலிளைத்தாரோ! கொடிய விலங்குகளால் அச்சமுற்றாரோ!" எனப் பதைபதைத்து ஏங்கி, குஞ்சுக்கு இரையையூட்டத் தாழாமலோடும் பறவைபோல மனோகதியும் பின்னிடச்சென்று, சந்நிதியையடைந்து சிவபெருமானது திருமுடியிலுள்ள பத்திரபுஷ்பங்களைச்செருப்புக்காலினாலேமாற்றி, வாயிலுள்ளநீரால் பிரானது திருமேனியும் உள்ளமுங்குளிர அபிஷேகித்து, பத்திரபுஷ்பங்களை முடிவளைந்து சூட்டி, திருவமுதையெதிர்வைத்து, இனியவார்த்தைபலசொல்லி ஊட்டி; பிரியாது அருகேநின்றனர்.

அவ்வேளையிலே வேடர்கள் திண்ணனாரைக் காணாமல் மிகுதியும் அச்சமுடையராய்க் காடெல்லாந்தேடிவந்து, அருகடைந்து; "ஐயனே, நீர் எங்களைநீங்கி இம்மலையையடைந்ததென்னை? யாங்கள் ஏதேனும் பிழைசெய்ததுண்டோ? சூரியன் உச்சிகடந்தனன். பசித்திருக்கின்றீர். இங்கடைந்தது அறிகிலேம். யாங்கள் விரையவராததுபற்றி முனியாது உடன்வருக." என்றுபலவாறுரைத்தும் எதிர்மொழிகொடாமையால் கவலையுற்று, "இங்கிருக்கும் இத்தெய்வம் இவரிடத்திலே ஏறியிருக்கின்றதோ! யாதோ! உணரேம். இதை நமது தலைவருக்கு உரைப்போமாயின் அவர்வந்து தக்கவனகயியற்றுவர்." என்று துணிந்துசெல்ல; சூரியனும்

அஸ்தமயனமாயினான். திண்ணனார் சிவபெருமானைத் தீயவிலங்குகள் அணுகுமென்றஞ்சி அம்புதொடுத்த வில்லோடு மறந்தும் கண்ணிமையாமல் நின்றுகாத்து, வைகறையிலே திருவமுதமைக்கச்சிந்தித்து, மலைச்சாரலையடைந்தனர். இது நிற்க.

அன்பு அருள் அடக்கம் சிவபத்திமுதலியவைகளே ஒருவடிவெடுத்தாற்போன்றவரும், நல்வினை தீவினைகளால்வரும் இன்பத்துன்பங்களைச் சமமாக எண்ணுபவரும், சௌந்தரியமாதர்கள் வலிந்துதழுவினும் தாயெனநாடுந் தபோதனரும், திருக்காளத்தியப்பரைத் தினந்தோறும் சிவாகமவிதிப்படி அருச்சிப்பவருமாகிய சிவகோசரியாரென்பவர் பிராமமுகூர்த்தத்திலே, எழுந்துசென்று, பொன்முகரியிலேஸ்நானஞ்செய்து, தலையிலேதிருமஞ்சனமும், கரத்திலே பத்திரபுஷ்பமுந்தாங்கி, சிவநாமத்தையுச்சரித்துக்கொண்டு, சந்நிதியையடைந்து, அங்கே ஊன்கள் சிதறிக்கிடக்கக்கண்டு, உள்ளம் நடுநடுங்கி, பக்கத்திலே குதித்தோடினார். பின்பு "தேவாதிதேவரது திருமுன்னே அநுசிதமாகிய இக்கொடுஞ்செய்கையைக் கொலைத்தொழிலஞ்சாத வேட்டுவப்புலைஞரோ செய்திருப்பார். அவர் இதுசெய்யத் தேவர்பிரான் திருவுள்ளமிசைந்தாரோ! இதை அன்புடையோர்கள் கண்டக்கால் உயிர்விடுவர். கொடுவினையேன் அங்ஙனஞ்செய்யாது உயிரோடுநிற்கின்றேன்." என்றுவருந்தி, "யான் பூஜாகாலந்தவற நின்றதனால் யாதுபயன்!" என்றுநினைந்து, இறைச்சிகளைத் திருவலகினாலேமாற்றி, கோமயந்தெளித்தனர். மீண்டு, பொன்முகரியிலே ஸ்நானஞ்செய்துவந்து, வேதமந்திரத்தினாலே சுத்திபுரிந்து, உருத்திர சமக நமகத்தினால் அபிஷேகஞ்செய்து, பத்திரபுஷ்பங்களாலருச்ச

னையியற்றி, திருமுன்னேநின்று, கரங்களைச் சிரமேற்குவித்து, கண்களினின்றும் ஆநந்தபாஷ்பஞ்சொரிய, திருமேனியெங்கும் மயிர்பொடிப்ப, அக்கினியிற்பட்டமெழுகுபோல மனம்உருகியிளக, நாத்தழும்ப, கீதமுடையுள்ளதாகிய சாமவேதம்பாடி, பலமுறைபிரதக்ஷணஞ்செய்து நமஸ்கரித்து, அரிதினீங்கி, தமதாச்சிரமத்தையடைந்தார்.

இப்பால் திண்ணனார் பன்றி மான்முதலியமிருகங்கள் பயிலுமிடமறிந்து, அம்பினாலகொன்று, அவைகளின் இறைச்சியை முன்போலப்பக்குவப்படுத்தி, தேக்கிலையிலிட்டு, கொம்புத்தேனைநிரம்பவிட்டுக்கலந்து, முன்போலவே திருமஞ்சனமுதலியவைகொண்டு, இறைவர்பசித்திருப்பரென ஓடிவந்து, பூசைசெய்து, இறைச்சிக்கல்லையைத் திருமுன்னர்வைத்து, "இந்த இறைச்சி முன்கொண்டுவந்ததுபோலன்று. இவை பன்றி முயல் மான் கலை மரை கடமையென்பவைகளின் இறைச்சி. இவைகளை அடியேனும் சுவைத்துப் பார்த்திருக்கின்றேன். தேனுங்கலந்திருக்கின்றது. தித்திக்கும்." என்றுசொல்லி உண்பித்து, அவர்பக்கத்திலே, பிரியாதுநின்றார். அந்தவேளையிலே, முதனாட்சென்றவேடர்களால் இவர்செய்தியைக்கேள்வியுற்று ஊணுறக்கமின்றியிருந்தமாதாபிதாக்களிருவரும்போந்து, பற்பலவுபாயங்களால் வசப்படுத்தவும் வசமாகாமைகண்டு, மனம்புழுங்கி, "இனிச்செய்வதியாது" எனத்தியங்கிச்சென்றனர். திண்ணனார் அவர்களடைந்ததும் மீண்டுச்சென்றதும் அறியாதவராகி, கடவுளிடத்தேபிணித்த கருத்தோடு பகற்காலத்திலே மிருகங்களைக் கொன்று ஊனையருத்தியும், இராக்காலத்திலே நித்திரையில்லாமல் அருகேநின்றும், தொண்டுசெய்துவர, சிவகோசரி முனிவரும் தினந்தோறும்வந்து, திருமுன்னே [illegible]கிடக்க

க்கண்டு அழுதுவருந்தி, அவற்றையகற்றிச் சுத்திசெய்து, நாகலிங்கப்பெருமானைப்பூசித்து, இவ்வநுசிதத்தை ஒழித்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்து, துக்கசாகரத்திலே மூழ்கியிருந்தனர்.

சிவகோசரமுனிவர் இங்ஙனமிருக்க; காளத்திநாதர் இவர்துயரை யகற்றத் திருவுளங்கொண்டு ஐந்தாநாளிரவிலே, சொப்பனத்திலேதோன்றி, "அன்பனே, நீ நமது முன்னேகண்டது இறைச்சியென்று வருந்தாதே: அது, நாம் விரும்பியருந்தும் பெறற்கரியவமுதமாகும்: அதையுண்பிப்பவனது செயலைக்கூறுகின்றோம்; கேட்பாயாக. அவன் நம்மிடத்து வைத்த அன்பு எவ்வளவென்னில், பலதெய்வநதிகளில் மூழ்கியும், விரதங்களை யனுட்டித்தும், தானங்களைப்புரிந்தும், ஊழைக்கடந்து ஓர்புதல்வனைப்பெற்றதாய்க்கு அப்புதல்வன்மேல் எவ்வளவன்பிருக்குமோ அவ்வளவேயாகும். அவன் எமது திருமுடியிலுள்ள பூக்களைச் செருப்புக்காலால் மாற்றுங்காலத்து, யாம் இளமகன்கையால் திருமுலைவருடப்பெற்ற மாதாவினது உள்ளம்போலப் பெரிதும் நெஞ்சமுருகுவேம். அவன் நம்மேலுமிழ்கின்றநீர் உள்ளிருந்துபெருகிய பேரன்பாத இருத்தலால், ஆராய்ந்துபார்க்கின் அது ஆற்றின்றுங் கொண்டுவரப்பட்ட நீரன்று; முனிவரபிஷேகிக்கும் மந்திரநீரினும் மிக இனிதென்றுசொல்லலாம். அவன் கழுத்தை மிகவும் வளைத்துச்சூட்டும் மயிர்களொடு கலந்த மலர்கள், வியாக்கிரபாதமுனிவன் முதலியோர் விதிப்படியெடுத்து சகஸ்திரநாமங்களை யுரைத்தருச்சிக்கும் தேன்விரிந்த மலரினும் மிகநல்லவாகும். அவன் முன்னே தன் வாயிலிட்டு ஆராய்ந்தெடுக்கப்பட்ட முழுச்சுவையையும் இளஞ்சூட்டையுமுடைய இறைச்சியைத் தந்தபின்பு, தேவர்

கள் இரத்தினபாத்திரங்களிலே நிவேதித்த பாற்கடலமுதமுமே வேம்பும் விடமுமாயின. அவன் எமக்குமுன்னே நின்று பேரன்போடு வாய்திறந்துரைக்குஞ் சொற்கள்போல, அறிவுமுதிர்ந்த ஜிதேந்திரியர்களாலே பாடப்படும் ஸாமவேதகானமும் இனியதன்று. அவன்மனம் நமக்குக்கோயிலாகும். அவனுரைகளெல்லாம் வேதமாகும். அவன் செய்கைகளெல்லாம் அறச்செயல்களேயாகும். அவனியல்பைக் காட்டுகின்றோம். நீ நாளைவந்து அவனறியாதவண்ணம் அயலிலே ஒளித்திருப்பாயாக. இனித்துயரொழிக." என்றுகட்டளையிட்டு மறைந்தளினார். அதுகேட்ட முனிவர் சொப்பனாவஸ்தையை நீங்கிச் சாக்கிராவஸ்தையையடைந்து, காளத்திநாதர் தமக்கருளிச்செய்த வார்த்தைகளை நினைந்துநினைந்து அதிசயித்து உஷஸ்காலையிலேபோய் பொன்முகரிநதியிலே ஸ்நானஞ்செய்து நித்தியகடனையியற்றி, அருச்சனைமுடித்து, சிவலிங்கப்பெருமானுக்குப்பின்னே தோன்றாது ஒளித்திருந்தனர்.

இவர் வருதற்குமுன்னரேசென்ற திண்ணனார் வேட்டையாடி இறைச்சியும் திருமஞ்சனமும் புஷ்பமும் முன்போல அமைத்துக்கொண்டு, அதிசீக்கிரமாகத் திரும்பிவரும்போது, பற்பலதுர்ச்சகுனங்களைக்கண்டு, "இச்சகுனங்களெல்லாம் இரத்தங்காட்டுகின்றன. என்கண்மணிபோன்ற எம்பெருமானுக்கு யாது சம்பவித்ததோ! தெரியேன்." என்றுமனங்கலங்கி, அதிசீக்கிரமாக ஓடிவந்தார். அத்தருணத்திலே அருட்பெருமான் திண்ணனாருடைய அன்புமுழுதையும் சிவகோசரியாருக்குக்காட்டத் திருவுளங்கொண்டு, தமது வலக்கண்ணினின்றும் உதிரஞ்சொரியப் பண்ணினார்.

அதை தூரத்திலேநோக்கி விரைந்தோடிவந்து,உதிரஞ்சொரிதலைக்கண்டார். காணவும், வாயிலுள்ள திருமஞ்சனஞ்சிந்த, கையிலிருந்த இறைச்சிசிதற, அம்பும்வில்லும் புறத்தே விழ, தலைமயிரிலே செருகப்பட்ட புஷ்பங்கள் அலைந்து சோர, ஆட்டுகின்ற கயிறு அற்றபொழுது வீழ்கின்ற நாடகப்பாவைபோலப் பதைபதைத்து, நிலத்திலேவீழ்ந்தார். நெடுநேரம் உள்ளுயிர்த்தலின்றி, இறந்தவர்போலக் கிடந்து, ஒருவாறுதெளிந்தெழுந்து பலமுறை கையினாலேதுடைத்து, உதிரமொழுகுதல் தவிராமைகண்டு, மீட்டும் வீழ்ந்து புரண்டெழுந்து, தமதுமுகமெல்லாம் உதிரஞ்சோரவும் மார்புவீங்கவும் கைகளாலடித்துக்கொண்டார். தலைபிளக்கவும் கைகள்சிதையவும் கற்களோடுமோதினார். "எமதுபெருமானுக்கு இத்தீங்குவிளைந்தது எனக்குப்பகைவர்களாகிய வேடுவர்களாலோ! அல்லது இம்மலையிற் சஞ்சரிக்கும் துஷ்டமிருகங்களாலோ! தெளியேன். அப்பகையைக்காண்பேனாயின், உயிரைக் கவராதுவிடுவேனோ!" என்று நெடுந்தூரம் ஓடிப்பார்த்தார். வேடர்களையும் விலங்குகளையும் காணாமையால் வருந்திமீண்டார். "மலையிடையெனக்குவாய்த்த மரகதமணியே, உம்முடையகண்களில் உதிரஞ்சோர்தற்குக் காரணம் யாதோ? சிறிதும் திருவாய்மலர்ந்தருளுகின்றீரில்லை! என்னைகொல்லோ!" என்று தழுவிக்கொண்டு, வாய்விட்டுப் பெரிதழுதார். இவ்வண்ணம் நெடுநேரங்கழித்து, பின்பு பச்சிலைமருந்து கொண்டுவந்து பிழிவோமாயின் இது தீருமென்றுகருதி, காடுமுழுமையுந்திரிந்து, கண்டவிலைகளையெல்லாம்பிடுங்கி, ஓடிவந்துபிழிந்தும், உதிரம்நில்லாமையைநோக்கி, உயிர்சோர்ந்து, "இனியான்இதற்குயாதுசெய்வேன்." என்று ஆலோசித்து நின்றார். நிற்க, "ஊனு

க்கூனிடல்வேண்டும்." என்னும்பழமொழி உள்ளத்திலே தோன்றியது.

உடனே இனி யான் என்கண்ணையிடந்து அப்பினால் இறைவர்கண்ணிலிருந்துபாயும் இரத்தம் தடைபடுமென்று தீர்மானித்து, தமது கண்ணைக் கணையினாலேகலைந்து, இறைவர்கண்ணிலே அப்பினார். அப்பொழுதே அப்பெருமான் உதிரத்தைமாற்றியருள; அதனைக்கண்டு, அடங்குதற்கரிய சந்தோஷசாகரத்திலமிழ்ந்திக் கூத்தாடினார். "நான் செய்த செய்கை நன்றுநன்று." எனவியந்தார். இப்படி சந்தோஷ சாகரத்திலே உலாவுஞ்சமயத்தில், அவரது முதிர்ந்தபேரன்பைச் சிவகோசமுனிவருக்குப் பின்னுங்காட்டுதற்குத் திருவுளங்கொண்டு, மற்ற இடக்கண்ணினின்றும் உதிரஞ் சோர்விக்க; அது திண்ணனாருடைய எல்லையிறந்த சந்தோஷசாகரத்தை உறிஞ்சியது. அக்கினிநிரயத்துவீழ்ந்து நெடுந் துன்பமுற்று நீங்கிச் சுவர்க்கவின்பமுற்றோனொருவன் பின்னும் அந்நிரயத்திலே வீழ்ந்தாற்போலத் திண்ணனார் உவகைமாறி, கரையில்லாததுன்பக்கடலிலேயழுந்தி, ஏங்கி, ஒருவாறுதெளிந்து, "மருந்தைக்கைகண்டேன்; எனக்கு இன்னுமொருகண் இருக்கிறது; ஆதலால், இதற்கஞ்சேன்." என்றுதுணிந்து, தம்முடையகண்ணைக் கலைந்தகாலையில், சிவபெருமான்கண் இவ்விடத்திலிருக்கின்றது என்றுதெரிதற்காக, ஒருசெருப்புக்காலை அப்பெருமான் கண்ணினருகே ஊன்றிக்கொண்டு, அம்பைத் தமது கண்ணிலேவைத்தார்.

கிருபாசமுத்திரமாகியபெருமான் அதைச் சகிக்கலாற்றாதவராகி, வேதாகமங்கள்தோன்றிய திருவாய்மலரைத் திறந்து, "நில்லுகண்ணப்ப நில்லுகண்ணப்ப என்னன்புடைத்தோன்றல் நில்லுகண்ணப்ப," என்று மூன்றுமுறை இனி

துமொழிந்துகொண்டே அவர்திருக்கரத்தைப் பிடித்துக்கொண்டனர். பிரமாதிதேவர்கள் மண்புதையும்படி கற்பகப்பூமாரி பொழிந்தார்கள். திண்ணனார் கையிலிருந்த அம்பையெறிந்துவிட்டு, சீகாளத்திநாதருடைய திருவடித்தாமரைகளைச் சிரசிலே சூட்டிக்கொண்டனர். சிவகோசமுனிவரும் அத்தியந்த ஆச்சரியமுடையராகி, அம்முதல்வனை வணங்கினர். அப்பெருமான் இருவினையொப்பும் மலபரிபாகமுமுடைய அவ்விருவர்களுக்கும் கிருபாநோக்கமளித்து, அவர்களை அக்கினிமத்தியிலிருந்து அந்தக்கரணமொடுக்கிய அருந்தவர்க்கும் பெறற்கரிய தமதுதிருவுருவத்திலே கலந்துகொண்டார். அற்றைநாள்முதலாக ஆன்றோர் சிவபெருமானருளியவாறே திண்ணனாருக்குக் கண்ணப்பரெனத் திருநாமம் வழங்குகின்றனர். என்று ஆறுநாளிலே முத்திபெற்ற அந்நாயனார்சரித்திரத்தோடு சிவகோசமுனிவர்சரித்திரத்தையும் உபதேசித்து, அவ்வரசர் வேண்டுகோளின்படியே, நக்கீரதேவர்சரித்திரத்தைக் கூறத்தொடங்கினர்.

கண்ணப்பச்சருக்கமுற்றிற்று.

---

## நக்கீரச்சருக்கம்.

பாண்டிநாட்டிலே, சோமசுந்தரக்கடவுள் அறுபத்துநான்கு திருவிளையாடலியற்றிய மதுரைப்பதியிலே, * சரஸ்வதியவதாரமாகவிளங்கி உலகமுழுமையும் தம்புகழைநாட்டிப் பொய்யடிமையில்லாப்புலவர் எனப்பெயர்பெற்றநக்கீரதேவர், கபிலதேவர், பரணதேவர்முதலிய நாற்பத்தெண்

---

*இச்சரித்திரவிரிவைத்திருவிளையாடற்புராணத்திற்கட்காண்க.

புலவர்களும், ஒருநாள் அக்கடவுளை யடைந்து, "எம்பெருமானே, எங்களிடத்து யாவரும் வந்து வீண்வாதஞ்செய்கின்றார்கள்; அங்ஙனஞ்செய்யாது அவரவர் புலமையையும் அளவிடுங்கருவியாக சங்கப்பலகையொன்று தந்தருள்க." என்று பிரார்த்திக்க; கடவுள் புலவருருக்கொண்டெழுந்தருளி, சதுரமாய் முழ அளவினதாகிய ஓர்பலகையையளித்து, "இது நம்போல்வார்க்கெல்லாம் முழம்வளர்ந்து இடங்கொடுக்கும்; இதை அளவுகோலாக வைத்துக்கொள்க." என்று கட்டளையிட்டு மறைந்தருளினார். அப்புலவர்கள் திருவுளமகிழ்ந்து, ஆலயத்தினது [illegible]டமேற்கிலே வங்கியசேகரனாற் றங்கள[illegible]க கட்டுவிக்கப்பட்ட சங்கமண்டபத்திலே, அப்பலகையிலிருந்துகொண்டு, உயிர்க்குறுதியாகிய அறம்பொருளின்பம்வீடென்னும் நால்வகைப்பொருள்களையும் புதுமொழிகளுள்ளே புணர்த்தி, நவரசங்களும் யாண்டுந்துலங்க, பலபிரபந்தங்களை அருளிச்செய்ததுமன்றி, சிவபெருமானே இறையனாரென்னுந் திருநாமத்தோடு தங்களுள்ளே ஓர்புலவராய் வீற்றிருந்து ஐயந்திரிபுகளை அகற்றியருளச் செந்தமிழைத் தேசமெங்கும் பரவச்செய்தனர்.

அக்காலத்திலே, இவர்களை உயிர்த்துணைவராகக்கொண்டு வேண்டியசிறப்புக்களை நடாத்தி அத்தியந்த அன்புடையனாயொழுகும் வங்கியசூடாமணியென்னும் பாண்டியன், வசந்தகாலத்திலே, ஒருநாள் மேல்மாளிகையிலே, மனைவியோடு தனித்து இனிதிருந்தனன். அத்தருணத்திலே, சிறியதென்றலோடுகலந்து, ஒருதிவ்வியமணம்வீச; அவன் அதை தனது மனைவியினது கூந்தலின்மணமெனமதித்து, விம்மிதமடைந்து, "இவ்வாசம் கூந்தலுக்கு [illegible]யற்கையோ! செயற்கையோ!" [illegible]ன ஐயமுற்று, இ[illegible]பிறர்க்குப் புலப்படுத்

தாது தன்மனத்தடக்கிக்கொண்டு, "யான் ஐயுற்றபொருள் விளங்கச் செய்யுளியற்றும் புலவர்கள் இதைக்கொள்க." என்று ஆயிரம்பொன்னை ஓர்முடிப்பாக்கி, அதைச் சங்கமண்டபத்தின்முன்னே தூக்கினான். புலவர்பலரும் அரசன்கருத்துவிளங்காமையால் வெவ்வேறுபொருள்களையமைத்து பாடல்களையியற்றி, அரசன்முன்னருரைத்து, அவைகள் அன்றெனமறுக்கப்பட்டமையால் வறிதகன்றிருக்க; அக்கிழி அறுப்பவரின்றியிருந்தது. இருக்குநாளிலே, உரோகணி நக்ஷத்திரத்தில் சனிபிரவேசிக்க, சூரியகிரகணமும் சந்திரகிரகணமும் அமாவாசை பௌர்ணிமைகளிலே அடுத்துவர, செவ்வாய்முற்பட்டுச் சுக்கிரன் பிற்பட்டமையால், மழையில்லாமல், தானியவிளைவுகுன்றி, பசிப்பிணிவருத்த; அதனால் உணவின்றி மடிந்தவரொழிய, பிழைத்தவருள்ளே சிலர் நரமாமிசங்களையும் அருந்தத்துணிந்தனர்.

அந்நாளிலே, மதுரையில் சோமசுந்தரக்கடவுளை வழிபடும் ஆதிசைவர்களுள்ளே ஒருவராகிய தருமியென்பவர், தமக்குப் பொருள்வரவு இன்மையால் கவலையுற்று, இனி யாம் செழிப்புடைய ஓர்தேசத்திற்சென்று ஜீவிப்பதே தகுதியெனத்துணிந்து, ஆலயத்தையடைந்து, சோமசுந்தரக்கடவுளை வணங்கி, "தாயினுமிக்கதயாநிதியே, யான் இனி இங்கு இருப்பேனாயின் சாதலையடைவேன்: ஆதலால், தக்கதேயத்திற்போயிருந்து, ஈண்டுச் செழித்தபின்னர் வருகின்றேன்." என்று முறையிட; சோமசுந்தரக்கடவுள் திருவருள்சுரந்து, "அன்பனே, நீவருந்தேல்; பாண்டியனானவன் தனதுகருத்தைவிளக்கி ஒருசெய்யுள்செய்யும்புலவர் கைக்கொள்ளும்படி ஆயிரம்பொன்னையமைத்த ஓர்கிழியை சங்கமண்டபத்திற்குமுன்னே தூக்கியிருக்கின்றான்; இப்பாடலையு

ளைத்து அதைப்பெற்றுக்கொள்வாயாக." என்று கட்டளை
யிட்டு, "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி—காம
ஞ் செப்பாது கண்டது மொழிமோ—பயிலியது கெழீஇய
நட்பின் மயிலியற்—செறியெயிற் றரிவை கூந்தலி—னறிய
வு முளவோநீ யறியும் பூவே." என்னும் திருப்பாசுரத்தை
அளித்தருளினார். அதுபெற்ற தருமியென்பவர் பெருமிதமு
ற்றுச்சென்று, அச்செய்யுளமுதத்தை அவ்வரசனது இரு
செவிகளிலும்புகட்ட; அரசன் தனதுகருத்தைவிளக்கியிரு
த்தலால் இனிது உவந்து, "இப்பாடலை சங்கப்புலவர்கள்பா
ற்சென்று அரங்கேற்றுவீராக." என்றுரைத்தனன். தருமி
சென்று, அப்புலவர்கள்பாலுரைக்க; அவர்கள்கேட்டு மகி
ழுந்தருணத்திலே, நக்கீரதேவர் கல்விச்செல்வத்தினாலதிக
ரித்த இறுமாப்பினால், "இப்பாடல் குற்றமுடைத்து." என்
றுரைத்தனர்.

அதுகேட்டதருமியார் வாட்டமுற்று, சோமசுந்தரக்க
டவுள் சந்நிதியையடைந்து, "ஒப்புயர்வில்லாதபெருமானே,
சில்வாழ்நாளையும் சிற்றறிவையுமுடைய ஓர்புலவர் தேவரீர்
செய்யுட்குக் குற்றங்கூறினர்." என விண்ணப்பிக்க; அப்பெ
ருமான் புலவர்வடிவங்கொண்டு, சங்கமண்டபத்தைச்சார்ந்
து, "குற்றமற்ற நமதுசெய்யுளுக்குக் குற்றங்கூறினவர் யா
வர்?" என்று வினவினார். உடனே நக்கீரதேவர் "யானேகூ
றினேன்." என்று தருக்கிமொழிதலும், பெருமான் "குற்ற
ம்யாது?" என்றுவினவ; அவர் "கூந்தலுக்கு செயற்கையால
ல்லது இயற்கையாக மணமில்லையே? அங்ஙனமிருக்க, இய
ற்கையென இல்லாததைக்கூறினமை[?] குற்றம்" என்று
கூறி, மீட்டும் அப்பெருமான் "[illegible]ம்பையர்கூந்தலுக்கு ம
ணம் இயற்கையன்றோ?" என்[illegible]றியவழியும், "அதுவும்

மந்தாரமலரொடுகலந்து மணத்தலால் செயற்கையே." என்றனர். சோமசுந்தரக்கடவுள் "நீவழிபட்டேத்தும் காளத்திநாதரது பாகத்துறைந்த ஞானப்பூங்கோதையம்மையினது கூந்தல் எத்தன்மையது?" எனவினவி, அதுவும் செயற்கையதேயெனச் சாதித்தல்கண்டு, நெற்றிக்கண்ணையும் சடைமுடியையுங் காட்டியருள; நக்கீரதேவர் விபரீதவுணர்ச்சியால் கடவுளைநோக்கி, "நீர் வடிவமுழுமையும் கண்களைக்காட்டினும் உமதுபாடல் குற்றமே; சடைகொண்டுமயக்கவேண்டுவதில்லை: இதற்குப்பயந்து எனதுகொள்கையைவிடேன்." என்றுரைத்தனர். கடவுள் அவரைநோக்கி, "அறிவிலாதவனே, வேதங்களாற்புகழப்படும் அம்பிகையினது கூந்தலை எம்மோடுமாறுபட்டுப் பழித்தாயாதலால் நீ குட்டநோய்கொண்டு அலைக." எனக் கட்டளையிடுதலும், நக்கீரதேவர் மிகவும் பயந்துநடுங்கி, திருவடிகளில்வீழ்ந்துபணிந்து, "கிருபாசமுத்திரமே, நாயிற்கடையேன் அறிவிலாது செய்த பிழையைப்பொறுத்தருளி இந்த சாபப்பிணிநீங்கத் திருவருள்புரிவீராக." என்றுபிரார்த்திக்க; பெருமான் திருவுளமிரங்கி, "நக்கீரனே, நீசென்று கைலையைக்காணின் இக்கொடுநோய்நீங்கும்." என்றுபணித்து, ஆலயத்துட்புகுந்து மறைந்தருளினர். தருமியார் பொற்கிழிபெற்றுக் களித்திருந்தனர். வறுமைதீர எங்கும் மழைவளஞ்சுரந்தது.

இப்பால், நக்கீரதேவர் சிவபிரான் றந்த சாபத்தீப்பிணி திருமேனியிற்கவிதலால் இனி இந்நோய்முதிருதற்குமுன்னமே கைலையையடைந்து தரிசித்து நிவர்த்தித்துக்கொள்ளல் வேண்டும் எனத்துணிந்து, புலவர்களைத் தனித்தனியழைத்து, "நட்பினர்களே, உங்களோடு உடன்வசிக்கும் வாழ்வையிழக்கின்ற பாவியாகிய என்னை மறவாதீர்." என்றுரைத்து,

வியாதிகாரணமாக விலகிநிற்க; அவர்கள் அதையறிந்து, நெருங்கியணைத்து, கண்ணீர்பெருக உளங்குழைந்தழுது, "பெறுதற்கரிய பெருந்தகையே, நுண்ணியவுணர்ச்சிமிக்க நும்மையிழந்து பயனற்றேமாகியிருக்கும் பாவமுதிர்ச்சியையுடையார் யாங்களேயன்றி வேறு யாவருளர்." என்று கலங்கினர். நக்கீரதேவர் அவர்களைத் தனித்தனித்தழுவி, "நட்பிற்கு ஒருதேயத்தராய் உடன்கலந்து பழகுதல்வேண்டுவதில்லை: உணர்ச்சியொத்தலேசிறப்பு. என உணர்ந்த பெரியீர், சிறியேன்பொருட்டுத் தியங்கற்க. யான்செல்கின்றேன்." என்றுகூறி, அவர்களுடையகண்ணும் மனமும் தொடர்ந்து செல்ல; அரிதினீங்கி, இனி இம்மதுரையையும் சோமசுந்தரக்கடவுளையும் அங்கயற்கண்ணம்மையையும் பாண்டியனையும் சங்கப்புலவர்களையும் எக்காலங்காணப்பெறுவேமெனவும், தமிழினிமையை எடுத்து எடுத்து யாவர்க்கு உணர்த்துவேமெனவும், நினைந்துநினைந்து, வருந்தி வழிக்கொண்டு, சோழநாடு மகதநாடு தொண்டைநாடு என்பவற்றிலுள்ள தலங்களையும், பருப்பதம் விருபாக்ஷம் கல்லியாணபுரம் காசி திருக்கேதாரமுதலிய வடநாட்டுத்தலங்களையும் தரிசித்து, ஒருதினமிருந்தவூரில் மற்றொருதினந்தங்காது விரைந்து, சிவகிருபையால் மனிதர்களாலடைதற்கரிய இமையமலையையடைந்து, திருமேனியிலே பிணி மிகவும் வருத்தவும் உள்ளங்கால்கள் வெள்ளெலும்பாகத் தேயவும் செல்லும்வழியிலே, கடலையொத்த ஓர்தடாகத்தைக்கண்டு, நீராடி நியதிமுடித்து, அதன்கரையிலே, தெய்வீகம்பெற்றதாய்ப் பணைத்துத்தழைத்திருக்கும் ஒரு ஆலவிருக்ஷத்து அடியிலே, தியானத்திருந்தனர்.

அச்சமயத்திலே; அவ்வாலமரத்திலிருந்து, ஓரிலை பா

திசலத்திலும் பாதிகரையிலுமாகவீழ்ந்து, சலத்தில்விழுந்த
பாகம் மீனும், கரையில்விழுந்தபாகம் பறவையுமாகி, மீன்
சலத்திலும் பறவைகளையிலுமாக இழுக்க; நக்கீரதேவர்
அப்புதுமையைக்கண்டு, அதிசயப்புடையராகி, தியானநி
லைத்வறியிருந்தனர். இருக்குங்கால், வடவாக்கினிபோலும்
உதராக்கினியுடையதாய் இடியைப்போலுங் கடியமுழக்க
முடையதாய் அருளென்பது சிறிதும் அணுகப்பெறுததா
யுள்ள ஒரு கரியபூதம், அவ்விடத்திலே சிவபூசையாதிகளி
ல் வழுவினவர்களாகிய தொளாயிரத்துத் தொண்ணூற்றொ
ன்பதின்மரை ஒரு இருட்குகையிலே அடைத்துவைத்துக்
கொண்டு, இன்னும் ஒருவன்வேண்டுமெனக் காத்திருந்து,
இவரைக்கண்டவுடனே தூக்கிச்சென்று, அக்குகையினுள்
ளேயடைத்து ஆயிரவராக்கி, தன்னியமப்படி நீராடுதற்கு
த் தடாகத்திற்செல்ல; முன்னர் அடைபட்டிருந்தவர்கள் த
ங்களுடைய பூர்வபுண்ணியமுதிர்ச்சியினால் நக்கீரதேவரொ
ழிந்தருளியதை உணராது, அவரைநோக்கி, "நாங்கள் நெ
டுங்காலமாகச் சிறையிலகப்பட்டிருந்தும் இப்பூதத்தினால்
உணவுமுதலியவைகளைப்பெற்று பிழைத்திருந்தோம்; இன்
றைக்கு உம்மாலே இதற்கிரையாகுங்காலம் சமீபித்தது."
என்று அழுதார்கள். நக்கீரதேவர் அவ்வாக்கியங்களைக்
கேட்டு மனஞ்சலிப்பில்லாமல், யாவருக்கும் இன்பமெய்த
லும் துன்பமெய்தலும் இயற்கையேயாயினும், இவர்களது
துக்கத்தை நிவர்த்தித்தலே நமக்குத்தகுதி. எனத்துணிந்
து, சிந்திப்பாராயினர்.

குறிஞ்சிநிலத்தலைவனாய் விளங்கும் குமரகுருபரனை
வழிபடில் துன்பமனைத்தும் சூரியனைக்கண்ட பனியென
த்தொலையும். அம்மட்டோ! அப்பெருமானது ஆறெழுத்தை

யும் உச்சரித்தோர் அநாதிதொடங்கியே அகலுதற்கரிதாய்த்தொடர்ந்த பிறவிநோயையுமகன்று வேதாகமங்களால் விளம்புதற்கரிய மெய்யின்பவீட்டிலே வீற்றிருக்கப்பெறுவர். இங்ஙனமாயின், இவ்வாறெழுத்தையும் உச்சரிப்போனையணுகிய பல வேற்றுமைப்பிணிகளும் விளிந்தொழியுமென்பது ஓர்வியப்பாகுமோ! ஐந்து பெரும்பூதங்களினுடைய வாய்களிலே அகப்பட்டுமாழ்கும் ஆன்மாக்களை அவற்றினீக்கிச் செம்பொற்சிறுசதங்கையணிந்த திருவடிநிழலிலே வைக்கும் எமது குமரவேளுக்கு இப்பொழுது இங்கே இச்சிறுபூதத்தாலணுகிய இந்நோயைத்தவிர்த்தல் எளிதேயன்றி அரியதாகுமோ! என இன்னனபலநினைந்து, அக்கடவுளுடைய பன்னிருசெவிகளும் ஆரப்பருகும் அமுதமாகியும், யாவரோதினும் சிந்தித்தபொருள்களைச் சிந்தித்தவண்ணமே அச்சணத்திற்றானே அளிப்பதாகியும், செய்யுள்களினுள்ளே பெரிதும் சிறந்தது யாதென ஆராயுங்கால் இணையின்றி எவற்றிக்கு முன்னிற்பதாகியும் விளங்கும் திருமுருகாற்றுப்படையை அருளிச்செய்தனர்.

அன்பர்துயரையகற்றும் அறுமுகக்குரிசில் வள்ளிநாச்சியாரது கன்னலுமமுதமுமங்கைக்கும் இனியமொழியையுமகற்றி, தங்கீர்பெருமான்கூறும் தமிழ்த்துதியைத் திருச்செவியிலேற்றருளி, சாலமகிழ்ந்து, பசுங்கடலினிடத்தே தோன்றிய செஞ்ஞாயிறுபோல மயில்வாகனத்திலெழுந்தருளி, புலவர்பெருமானைபுண்ண அப்பூதம் அணுகுங்கால் கதையினால்மோதி, முடியைத்தகர்த்துவீட்டி, யாவரையுஞ்சிறைவிடுவித்து, திருவருள்பாலித்தனர். உடனே நக்கீரதேவர் எமதுகுலமுழுதையும் ஆளும் அக்கோமானைவணங்கி, "அடியனேனதுசெருக்கைநோக்கி ஆலவாயமலர்முனிந்து இப்

பிணிமுதிர இசைத்தருளினார். யான்பயந்து கொடியனேன் பிழையைப் பொறுத்துக்கொள்க. என்று பிரார்த்தித்தவழி, கைலையைத்தரிசிக்கின் இதுநீங்கும். எனத்திருவருள்புரிந்தனர். அதுகொண்டு திருக்கைலையைத்தரிசிக்கவந்து இவணிருந்தகாலையில் இப்பூதம் இவ்வாபத்தைவிளைக்க தேவரீர் எழுந்தருளி நிவர்த்தித்தருளினீர். இனிக்கைலையையும் தரிசிப்பித்து இந்நோயையுமகற்றியருள்க." என்றுபிரார்த்திக்க; கந்தவேள்கருணைகூர்ந்து, ஆலவாயெந்தை இன்னகைலையென்று சுட்டியுரையாமையால் தென்கைலையினும் தீப்பிணி தீருமெனத்திருவுளங்கொண்டு, பொய்கையொன்றுகாட்டி, "இதில் மூழ்குவையேல் திருக்கைலையைக்காண்பாயெனவும், எம்மைத்துதித்த இப்பிரபந்தத்தையோதினோர் இஷ்டசித்திகளை அடைவரெனவும், கட்டளையிட்டு, மறைந்தருளினார்.

நக்கீரதேவர் அக்குழகனை வணங்கி, அப்பொய்கையிலமூழ்கி, மேற்கடலிற்படிந்தசூரியன் கீழ்க்கடலிலெழுந்தாற்போல தென்கைலைதோன்றப் பொன்முகரியிலெழுந்தார். தேவர்கள் விண்மறையக் கற்பகப்பூமாரி சொரிந்தனர். நக்கீரதேவர் வியாதியகன்று, கடைந்தெடுத்தமணிபோலத் திருமேனிவிளங்க, நெஞ்சிலன்புபெருக, விழிகளில் நீர் சொரிய, கரங்களைச்சிரமேற்குவித்து, நாகலிங்கப்பெருமானையும் ஞானப்பூங்கோதையம்மையையும் பலமுறைபணிந்தெழுந்து, ஐந்தெழுத்தையும் அகலாதுச்சரித்து, அன்புமயமாகி, கைலைவேறு காளத்திவேறு என்னுஞ்சிந்தனையின்றி, கைலைபாதி காளத்திபாதியாகக்கலந்து, ஒற்றுமைப்படுத்தி, ஒரு வெண்பாவந்தாதியைப்பாடியருளினார். அதைத் திருச்செவியேற்றுமகிழ்ந்த காளத்திநாதர் தரிசனந்தந்தளித்து, "வேண்டியவரம்யாது?" எனவினவியவழி, 'எளியேனது

உடலைக்கவிந்த இப்பிணியை ஒழித்தருளியதுபோலவே அறிவைக்கவிந்த ஆணவப்பிணியையும் அகற்றியருளல்வேண்டும்." எனவேண்டிக்கொள்ள; பெ[illegible] சத்திநிபாதத்தால் பந்தபாசத்தை முற்றக்களைந்[illegible], திருவடிநீழலிலே இருத்தியருளினார். என்றுரைத்தருளி, அவ்வரசர்வேண்டுகோளின்படியே, கன்னியர்கள்சரித்திரத்தைக் கழறத்தொடங்கினார்.

நக்கீரச்சருக்கமுற்றிற்று.

---

## கன்னியர்ச்சருக்கம்.

மதுரைப்பதியிலே, பரத்தையர்குலத்திலே, பெண்ணியற்கைமுழுதும் அமைந்த மாணிக்கவல்லியென்பவள் ஒருத்தியிருந்தாள். அவள் அரசிளங்குமாரரென்னும் குடங்களை அழகென்னும்கயிற்றாற்பூட்டி, அவர்கள்மனையினுள்ள பொக்கிஷசாலையென்னும் கிணற்றிலேவிடுத்து, பொருளென்னும் ஜலம்வற்றும்படி நாடோறும் முகந்து முகந்து, மிக்க பொரு[illegible]ீட்டி, வாழுநாளிலே, பூர்வபுண்ணியமுதிர்ச்சியால் கருப்பமுடையளாகி, திருமகளும் கலைமகளுமே சிவஞானமாதர்களாகி அவதரித்தாரெனவும், வேதாகமங்களே சிவஞானத்தைவிளக்க ஒருருக்கொண்டு வந்தனஎனவும், உலகிலுள்ளோர் உவப்பவும், மன்மதனது செருக்கு அழியவும், இரண்டுபுத்திரிகளைப்பெற்று, சந்தோஷசாகரத்திலேமூழ்கி, நீராட்டி, முலைப்பாலூட்டி, பற்பலஅணிகளைப்பூட்டி,

தொட்டிலிலிட்டுத்தாலாட்டி, திருஷ்டிதோஷமணுகாவண்ணம் இரண்டுகண்மணியும்போல வளர்த்துவந்தனள். அந்நாளிலே அப்புத[illegible]பெண்ணிலக்கண முழுதுமமைந்து, இலக்குமியினும் பேரழகுடையராகி, மெள்ளக்கவிழ்ந்து, நிலத்திலிருந்து, தவழ்ந்து, நடந்து, ஓடி, பிள்ளைப்பிறைபோல நாளுக்குநாள்வளர்ந்து,பேதைப்பருவங்கடந்து, பெதும்பைப்பருவமுடையராகி, பற்பலகலைகளையும் கற்கும்நிலைமையையடைய; அதைக்கண்ட மாணிக்கவல்லி மனங்களித்து, தமக்குரிய கலவித்தொழில்களை அவரறிந்துகற்கும் உபாயத்தை உள்ளேசிந்தித்து, விரகமிகுதற்கேதுவாகிய சிற்சிலலீலைகளை மாடமுழுமையும் சித்திரித்தும், போகவோசைபயிற்றுகின்ற மயில்முதலிய பறவைகளையும் யாழ்முதலிய கருவிகளையும் மிகச்சேகரித்தும், சூரியவட்டத்திலே இருளைப்பழகுவித்தல்போல அவர்களுக்கு காமக்கல்விகளையும் கானத்திறங்களையும் கற்பித்தனள்.

அவள் இவ்வாறு மிகமுயன்று கற்பித்தும், அவர்கள் உள்ளத்திலே சிவபிரான்வெளிப்பட்டுநின்று சிவாகமங்களென்னும் அபரஞானஉணர்ச்சியையும், பந்தபாசத்தைப் பற்றறக்களையும்அனுபவமாகியுள்ள பரஞானஉணர்ச்சியையும், தந்தளித்தலால், அவர்கள் வறியகாமத்திலேபயிலாது, கரணங்களுக்கு விஷயமாகிய யாவும் சிவமெனக்கண்டு, வேறு மாயாவிசித்திரத்தோற்றம் இல்லாதவராகி, இவ்வனுபவம் நிலைபெறுதற்பொருட்டு சிவனடியார்களைத் தேடித்தேடி,காணப்பெறின் துதித்துத்துதித்து, அவர்கள் திருவடிகளை சிரசிலே சூடிச்சூடிவணங்கும் தொண்டிலேமிகுந்தவராயினர். அன்றியும்,வேட்கைக்குறிப்புகள் வஞ்சமொழிகள் பழிப்புச்சிந்தனைகள் பாவச்சொல்கள் முதலியவற்றுள்ளே

ஒன்றும்பற்றுதவராகி, பெதும்பைப்பருவமடைந்த அக்காலத்திற்றானே, உலகவாக்கியங்களிலே ஊமையர்போலாகி ஐந்திந்திரியங்களையும் அடக்கிப் [illegible]ராகியும், சிவவாக்கியங்களை உச்சரித்தலில் [illegible]பேரன்ற நல்வாக்குடையராய் ஆசைமுதிர்ந்[illegible]ம்பெண்ணென ஓங்கியுமிருந்தனர். இங்ஙனமிருக்குங்கால், கடைச்சங்கத் தலைமைப்புலவராகியிருந்த நக்கீரதேவநாயனார் தென்கைலையையடைந்து, கைலைபாதி காளத்திபாதியாக ஞானவந்தாதிபாடியதையும், சீகாளத்தியப்பரது சோதிசொருபத்திற் கலந்ததையும் தொண்டராற்கேள்வியுற்று, பேரானந்தமுடையராய், நாடோறும் அந்த ஞானவந்தாதியைப் பாராயணஞ்செய்து கொண்டு, நாதலிங்கப்பெருமானைக் கண்ணிற்கண்ட கண்ணப்பநாயனார்போலவே கேள்வியினாலேயே பூசல் புனைதல் உண்ணல் உடுத்தலாதிகளில் வெறுப்புடையராகி, காளத்தியைத் தரிசிக்கவேண்டுமென்னும் அவாவொன்றையே மேற்கொண்டிருந்தனர்.

அதுகண்ட மாணிக்கவல்லி மகளிரைநோக்கி, "பெண்களே, மழைபொழிந்த காலத்திலே விதைத்துப்பயன்கொள்ளும் உழவர்போலக் காளையர்கள்வந்து கவிகின்ற இளமைபெற்ற இக்காலத்திலே பொருள்பறியாது விடுத்தால் நுங்களுக்கு இளமைப்பருவம் பின்னர்வாய்க்குமா? கல்வியினாலும் கட்டழகினாலும் முதிர்ச்சியுடையராகி எக்காலம் பயன்படுவீரென்று காத்திருந்த எனக்கு, நீவிர்செய்யுமுதவி இவ்வளவுதானோ? பயன்படாத உங்களிடத்திலே பெண்ணிலக்கணமுற்றும் அமைந்திருத்தல், ஈகையில்லாதவனிடத்திலே பொன்னும், அவையையஞ்சுவோனிடத்திலே அரியகல்வியும், வீரமற்றபேடிகையிலேவேலும், வாய்த்திருத்

தல்போலாம். நீவிர், இளமைப்பருவத்திலேயே என்பானு
தித்து எனது அழகுமுழுமையுங்கெடுத்ததேயன்றி, உங்கள்
பொருட்டுச் செல[illegible]திரவியத்திற்கு உதவியொன்றும்
புரிந்திலை. மணிமந்திர ஔஷதங்களாலும் பலவகையந்
திரங்களாலும் ஆடவரைமயக்கி அவர்பொருளைக்கவர்ந்தா
ல் சிவபெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் உதவியாகா
தா? அழகு சிறிதுமில்லாதவரும் அணிமுதலியவற்றால் அலங்
கரித்துக்கொண்டு தம்மை அழகுடையர்போலக்காட்டியும்,
பிழையில்லாத ஆடவரையும் பிழையுடையராக்கி பொய்ய
ன்புபாராட்டி உணர்வையொழிந்து அவர் பலமுறைவேண்
டிருந்தும், நாடகத்தாலும் நல்லிசைகளாலும் மயக்கியும்,
பொருளீட்டிக்களியாநிற்பர். நீவிர் எவற்றினும் சிறந்திரு
ந்தும் இங்ஙனஞ்செய்து பொருளீட்டாது இளமையைக்கழி
த்துவிடின் மூப்புமுதிர்ந்தவழி உம்மை இளைஞர்விரும்புவ
ரோ?" என்று இன்னனவாகிய தன்குலச்செயல்களை புலை
க்க; அவையாவும் கவிழ்த்தகுடமீது விடாதுபொழியும் ம
ழைநீர்போலச் சிறிதும்நுழையாது புறங்கழியநின்ற கன்
னியருளைப்பாராயினார்.

"அன்னையே, மின்னல்போலத் தோன்றியழியும் இவ்
வுடம்பை வளர்க்கவிரும்பி கொடிய தீவினைகளை இயற்ற எ
மக்கிசைப்பது நினக்குத்தகுதியா? இப்பியிலுதித்தமுத்தான
து அந்தஇப்பிக்கு ஒருதவியையும்புரியாது தம்மை அணியத்
தக்கவர்மேனியை அடையும்; அதுபோல்வே, நின்பாலுதித்
தயாங்களும் நினக்கு ஒருதவியையும்புரியாது சிவபிரான்தி
ருமேனியிலே கலத்தலையடைவேம்: பரமனையழைத்துத்தரு
ம் பஞ்சாக்ஷரத்தையுச்சரிக்கும் எங்களுடைய வாய் மனித
ரையழைத்துத்தரும்மந்திரங்களை மறந்தும் உச்சரியா:பற்ப

லஅணிகளைச்சுமக்கினும் பாரமேயன்றிப் பயனுண்டோ? ஓர் உருத்திராக்கத்தை ஒருதினம் உடலிலணியில் வினையாவும் விட்டொழியுமே? கஸ்தூரி சந்தன[illegible] கலவைகளைக் கலந்து கலந்து ஒய்வில்லாமல் உடலிற்புனைந்தாலும் சிறிது மலம் அகலுமோ? விபூதியை விரும்பியணியில் அம்மலம் யாவும் விளிந்தொழியுமே? மிக்கவொளிபடைத்த தீபத்தையுடைய வீட்டிலே இருள் நுழையுமா? அதுபோலவே, எம்பிரானிருக்கும் எங்கள் உள்ளத்தில் அறிவையொழிக்கும் காமநோயணுகுமா? தத்துவங்களுக்கு அதீதமாகிய தனியிடத்திலே விமலனைக்கலந்து மெய்ம்மைஇன்பம் அனுபவித்தயாங்கள் மாண்டுபோகும் மனிதனைக்கலந்து பொய்ம்மைஇன்பத்தைப் பொருளெனக்கொள்வமா? களிப்பைவிளைக்கும் யானையைவிரும்பியேறுவோர் கழுதையையேற விரும்புவரோ? அதுபோல, சிவதருமங்களை மேற்கொண்டயாங்கள் உம்முடைய குலதருமங்களை மேற்கொள்வமா? இம்மைமறுமை இன்பங்களைப்பயக்கும் எம்பெருமானைவழிபடும் யாங்கள் பொய்ம்மைப்பொருளைநாடி, புல்லியவரசனைப் புகழ்வமா? இம்மையிலறங்களை இயற்றாது பொருளீட்டில் மூப்புமுதிர்ந்தக்கால் முறைப்படி அறங்களை இயற்ற முடியுமா? நீயேசொல்வாயாக. உண்டசுவையமுதையும் உடனே மலமாக்குகின்ற உடலைவளர்க்குநிமித்தம் தீயதொழில்களையியற்றித் திரிதரும் மனிதர்களை மக்களுள்ளேபதரொன்று மதிவல்லோர் கூறுவர். கணிகைமாதர்கள் உள்ளுறவில்லாமல் வெளியுறவுபாராட்டி செல்வமனைத்தையுங் கவர்ந்துகொண்டு நம்பியஆடவனை நரகத்துமிடுதலால் கள்ளரினும் கொடியவரோ ஆவர். குயிலானது காக்கையோடு ஒருகூட்டிலே கலந்திருப்பினும் அக்காக்கையின்செய்கையிலே பழ

காததுபோல உம்மோடுயாங்கள் ஒருங்கிருப்பினும் உமது தொழிலிற்பயிலேம்: ஆகையால், எங்களை வசப்படுத்துமினைவை இன்[illegible]ப்பாயாக." எனவற்புறுத்தினர்.

அதுகேட்டகொடிய தாய் மனம்புழுங்கி, மகளிரைச்சீறி, "யான் மலடியுமாயினேனில்லை: மக்களைப்பெற்று மகிழ்ச்சியுறும் சிறப்பையுமடைந்தேனில்லை. நல்வினைபுரிந்தோரேயன்றி யேனையோர் தம்புதல்வரா லுதவிபெறுவரோ?" என்று துக்கித்து, பின்பு "தயங்கிக்கிடக்கும் இவர்களுடைய சித்தத்தை மணிமந்திரௌஷதங்களாலே தெளிவித்துக் காம இச்சையிலே திருப்புவோர், பொருள்கொடாமலே இவரை அனுபவிக்கக்கடவர்." என்று யாவருக்கும் வெளிப்படுத்த; இதையறிந்த இருவரும் இவளை நீங்கி என்று தென்கயிலையைத்தரிசிக்கப்பெறுவோமென்னும்சிந்தனையோடு பாம்பின் வாய்ப்பட்டதேரைபோல இருந்தனர். அக்காலத்திலே, இவர்கருத்தையறிந்த இரண்டுகள்வர்கள் இவரணிந்திருக்கும் ஆபரணங்களைக்கவரவேண்டுமென்னுங் கருத்துடையராய், பாலிலேமறைந்த நஞ்சுபோலவும் பழத்திலேமறைந்த புழுப்போலவும் தவவேடத்தைமேலேபூண்டு, தங்கள் நிலைமை வெளிப்படாவண்ணம் கன்னியர்களிருக்கும் இல்லத்திலே வந்து, "நும்மைக் காளத்திகாக்க." என்னும் மொழியோடுநுழைய; அக்கன்னியர்கள் தாய்மொழிகேட்ட சேய்போலப் பெருங்களிப்படைந்து வணங்கி, அவரையழைத்துச்சென்று, மிகவும் உபசரித்து, "சுவாமிகாள், நீவிர் எங்குள்ளீர்? எங்குச்செல்கின்றீர்?" என்றுவினவினர். அக்கள்வர்கள் "யாங்கள் இஷ்டசித்திகளைப்பாலிக்கும் எம்பெருமான்வீற்றிருக்கின்ற தலங்களையெல்லாம் தரிசித்துவருவேம்; தற்காலம்,காளத்தியைத் தரிசிக்கவேண்டுமென்னுங் காதலா

ல் அங்குச்செல்கின்றேம்." என்றுரைக்க; அக்கன்னியர்கள் "அங்ஙனமாயின் யாங்களும் காளத்தியைத்தரிசிக்க விரும்பியுள்ளேம்; எம்மையும் உடன்கொண்டு செல்வீரால் உமக்கியற்றும் கைம்மாறுண்டோ?" என்றுரைத்தனர்.

அக்கள்வர்கள் உள்ளங்களித்து, கன்னியர்களைநோக்கி, "மங்கையர்களே! மெல்லியசரீரத்தினையுடைய நீங்கள் வெப்பமுதிர்ந்த பாலைநிலமுதலிய கடியநிலங்களை எவ்வண்ணங் கடப்பீரென்பதையும், நுங்களை அழைத்துச்சென்றால் பழிமொழி மிகவிளையுமேஎன்பதையும், நும்மைப்பெற்ற தாயானவள் கன்றையிழந்த பசுப்போலக் கலங்குமேஎன்பதையும் நினைந்து, அஞ்சுகின்றேம். ஆயினும், காளத்திகாணப்பெற்ற கண்களேகண்களென்றும் காளத்திநகருக்கேகும் கால்களேகால்களென்றும் காளத்திதன்னையுன்னும் கருத்தொன்றே கருத்ததென்றும் காளத்திபுகழுநாவே நாவென்றுங்கற்றோர்சொல்வர். அன்றியும், இச்சரீரத்தோடு அடைதற்குரிய தென்கைலைக்கு யான்செல்கின்றேனென்று ஒருவர் விளையாட்டாலுரைப்பினும் கைலைப்பதவியையடைகுவர். அங்ஙனம்செல்பவரை விளையாட்டாற்றடுப்பவரும் சூரியசந்திரருள்ளமட்டும் கடுநிரயமெய்தித் துன்புறுவர். ஆதலால், அன்னையர்களே, நீவிர் காளத்திக்குச் செல்லவேண்டுமென்னுங் கருத்தை விலக்குதற்கு நாம் உடன்படோம்." என்றுரைத்தனர். அவ்வார்த்தையை அக்கள்வர் மனதோடுரைத்திலரேனும், அம்மங்கையர் வாய்மையாகவேகொண்டு, "யாங்கள் சிவபிரானை அடையப்பெறின் இச்சரீரம் யாதுபடினும் என்? உலகோர் இகழ்ந்தாலென்? புகழ்ந்தாலென்? எம்மை எவ்வகையாலேனும் தென்கைலைசேர்ப்பீராக." என்றுவேண்டிக்கொள்ள, அக்கள்வர் நன்

11497

றென இசைந்து அர்த்தயாமத்திலே, அன்னையறியாமல் இன்னிடம்வந்து சேருவீராக." என்று குறிப்பிட்டுரைத்துச் சென்றனர்.

கன்னியர்கள் ...ங்கள்நிழல்போன்ற இரண்டுசேடியர்கள் வேண்டியதிரவியங்களை ...டன்கொண்டுவர, அர்த்தயாமத்திலே குறித்தஇடஞ்சார்ந்து, கள்வரோடு, விடியுமுன்னரே இருகாதங்கடந்து, மறுதினமுதல் இடையிலுள்ள தலங்களையெல்லாம் தரிசித்துக்கொண்டு, சோழநாட்டையடைந்து, கும்பகோணமுதலிய தலங்களையிறைஞ்சி, சிதம்பரத்தையடைந்தனர். அங்கே திருவெல்லையைவணங்கி, வீதிவலம்வந்து, ஆலயத்தெதிரேபணிந்து, பிரதக்ஷிணம்புரிந்து, ஸ்ரீமூலட்டானேசுரரையும் பஞ்சகிருத்தியநடனம்புரிந்தருளும் சிற்சபாநாயகரையும் சிவகாமியம்மையையும் கண்படைத்தபயன்பெறக்கண்டு, தரிசித்து, பரவசப்பட்டுத்துதித்து, அத்தலத்திலுள்ள சிவகங்கை குய்யதீர்த்தமுதலிய தசதீர்த்தங்களிலும் ஸ்நானம்செய்து, காலந்தோறும் சுவாமிதரிசனம்செய்துகொண்டு, சின்னாள்வசித்திருந்தார். பின்பு பிரியாவிடைகொண்டுநீங்கி, இடையிலிருக்கும் தலங்களை வணங்கி, காஞ்சீபுரத்தைச்சார்ந்து, திருவேகம்பநாதரைத்தரிசித்துத்துதித்து, திருக்காளகிரியென்னும் தலத்தையடைந்து, நதியிலேஸ்நானம்செய்து, சித்தகணங்கள்வழிபடும் சித்திவைரவரைவணங்கி, வலம்புரிந்து, யாவருக்கும் போகமோக்ஷங்களைப்பாலிக்கும் வாலிநாதரைத்தரிசித்துப்பரவி, புறத்தேவந்து, ஒருபுராணிகரைக்கண்டு நமஸ்கரித்து, அத்தலமான்மியத்தைவினவ; அவர் சொல்வாராயினர்.

"மங்கையர்களே, முற்காலத்திலே மூழுவலிபடைத்த வாலியென்பவர் தமது ஆன்மார்த்தலிங்கத்தை இத்தடாகத்

தின்கரையிலேவைத்து, திருமஞ்சனமுதலியவற்றாற்பூசித்து, தோத்திரஞ்செய்து, அன்புமேலிட்டு ஆனந்தக்கூத்தாடி, வழக்கப்படியே பூசைப்பேடகத்தில் எழுந்தருளுவித்தற்குக் கரத்தாலெடுக்க, பெருமான் அசையாமைகண்டு, இருகையினும் இறுகப்பிடித்தெடுத்தனர். அங்ஙனம் எடுத்தும் அசையாமையால் மனங்கலங்கி, அப்பெருமானை வாலினாலே மிகவும் சுற்றிக்கொண்டு, கரங்களையூன்றி, அங்கூடுமளவும் நிமிர்ந்துபெயர்க்கவும், பெயராமைநோக்கி, வாலை விடுவித்து, பெருமூச்செறிந்து, துதிக்கத்தொடங்கினார். "தேவாதிதேவரோ, தேவரீர் திருவருள்வைத்து வந்தாலல்லது பேயேன்வலிந்து பெறுதற்கெளியீரோ! வாலினாலே உமதுதிருமேனியில் தழும்புபடத் தீங்கிழைத்தேன்! தீயேன் என்செய்வேன்! என்செய்வேன்!! ஆ! ஆ! இளம்புதல்வனை அன்னையானவள் கடுங்காட்டினடுவே அருளின்றிவிடுத்த தன்மைபோல அடியேனைக்காவாமல் கைவிட்டு இங்கேவீற்றிருக்கின்றீர். யான்செய்தபிழையுண்டோ! கிருபாசமுத்திரமே! என்னுயிர்நீ, என்றுணைநீ, என்னுடையவாழ்வுநீ, அன்னையுநீ, அத்தனுநீ, இங்கு எனக்கு உறவாகவேறுயாவர் உளர்? நின்னைநீங்கில் எனதுயிர் நில்லாது; நில்லாது." என்று பரிந்துவேண்ட; அப்பிரான் பிரசன்னராகி, "அன்பனே, யாம் இவ்வனத்திலே இத்தடாகக்கரையிலே வீற்றிருத்தலை விரும்பியுள்ளோம்; இதுபற்றிக் கவலையடையேல்: இன்றுமுதல் உனதுள்ளத்திலே வீற்றிருந்து நின்பூசையை அங்கீகரித்தருளுவேம்." என்று ஆஞ்ஞாபித்து, சிவலிங்கத்திலே மறைந்தருளினார்.

அதுகேட்ட வாலியென்பவர் இப்பெருமான் என்னைவிட்டு இவணிருந்தது இத்தடாகத்தினது ஆசையாலன்றி

வேறில்லை. ஆகையால், இதை அழித்துவிடுவேனென அதிர்த்து, ஒரு பெருமலையையெடுத்து, நீர்த்திவலைகள் மேலுலக முற்றுஞ் செல்லும்படி ஓங்கியெறிந்தான். எறிந்தவழி, அம்மலையினின்றும் சிதறிய மருந்துக்களால் அனேகர் உயிர்பிழைத்தல்முதலிய நலங்களையடையத்தக்கதாகவும் அழிவில்லாமல் யாவர்க்குமுதவியாகப் பெரியநதியாகி பெருகிச்செல்லுதலைக் கண்டு, இப்பிரான்திருவுளம் இதுவேயாயின் யான்செய்வது யாதெனப்பணிந்து சென்றனர். ஆகையால், இந்நதியில் மூழ்குவோர் பவக்கடலைக்கடந்து முத்தியாகிய கரையையடைவர். இது தீவினையென்னும் செத்தைக்கு நீர்வடிவமாயிருக்கும்நெருப்பாகும். கைலைபோலவே இம்மலையிலும் வாலிநாதர் உமாதேவியோடுவீற்றிருக்கின்றார். இப்பெருமானை வணங்குவோர் செறிந்த பாதகமனைத்தையுமழித்துச் சிவகதியெய்தப்பெறுவர். இத்தலமான்மியம் இதுவாகும்." என்றுரைக்க; கன்னியர்களிசிறந்து, அவரை மலர்கொண்டருச்சித்துவணங்கி, அன்றிரவிலும் வாலிநாதரைத்தரிசித்து, ஒருமனையிலே தங்கியிருந்தார். இவ்வாறு தங்குமிடந்தோறும் இவர்களுக்குக் கள்ளரால் ஆபத்துவிளையாவண்ணம் சிவபெருமான் பல அடியவர்வேடம். தாங்கிவந்து நாடோறுங் காத்தருளினார்.

தங்கியமங்கையர் அருணோதயத்திற்கு முன்னொழுந்து, நியதிமுடித்துச்சென்று, அன்று ஒருபதியிலேதங்கி, மறுதினம் தென்கைலைக்குச் சமீபமாகச்செல்லுங்கால், கள்வர்கள் இனி நகரங்குறுகி விட்டது; இதுகடந்தால், நமக்கு இடம்வாய்க்காது: ஆகையால், தனித்த இவ்வனத்திலே இந்நால்வரையும் உயிர்போக்கி [illegible]திகளைக்கவர்வோமென்று உட்கொண்டிருந்த பொல்லாநினைவை வெளிப்படுத்த;

அங்கிலகண்ட இளையவள் உள்ளம்நடுநடுங்கி, "தமக்கையே, இவர்கள் நம்மைமுடித்தற்கு முயல்கின்றனர்." என்று அறிவித்தனள். அதுகேட்டமூத்தாள் "தங்கையே, இவ்வளவுங் காத்துவந்த காளத்தியண்ணலார் இனிக்காவாதுவிடார்: நீ அஞ்சேல்; அஞ்சேல்." எனத்தேற்றி, கவலையற்று நிற்குந் தருணத்திலே, தென்கைலாயப்பெருமான் பாம்பின்வாய்த்தேரையைவிடுவித்துப் பாதுகாப்பார்போலக் கள்வரனைரும்நீக்கிக் கன்னியரைக்காக்கத் திருவுளங்கொண்டு, மலர் கொய்துதொடுக்கும் தொண்டர்வேடந்தாங்கி அணுகினர். அவரைக்கண்டவுடனே கள்வர்கள் விரைந்தோட; பெருமானருகுவந்து, தம்மை அன்பொடுவணங்கிநின்ற கன்னியரை நோக்கி, நீயிர், எங்கிருந்துவந்தீர்?" என்றுவினவ; அவர்நடந்தயாவும் விண்ணப்பஞ்செய்தனர். பெருமான் "மங்கையீர், உம்மைக் காளத்தியிற்சேர்க்கின்றேம்; வருவீராக." என்றழைத்துக்கொண்டு, நிலமகள்தவத்தால் திருவடிகள் நிலந்தோயச்சென்று, தென்கைலையைச்சார்ந்து, கன்னியரை நோக்கி, "இதுவேகைலைமலை; அது துர்க்கைவெற்பு; அம்மலை நீலப்பருப்பதம்; இந்நதி பொன்முகரி; இது மயூரதீர்த்தம்" எனமற்றவைகளையும் அறிவித்து, மறைந்தருளினர்.

கன்னியர் திசைகளைநோக்கி, பெருமானைக்காணாமையால், இங்கேவிடுத்துச்சென்றவர் இறைவனெனத்தெளிந்து, "ஆ! ஆ! தெலுங்குவழங்கும் இத்தலத்திலே நம்பெருமான் தமிழ்ச்சங்கமராய் நணுகியது சால நன்றுநன்று." எனவியந்தும், "அந்தோ! முதல்வன் அணுகப்பெற்றும் முத்தியின்பம்பெறுமல்,மணிபெற்றிழந்த வறிஞனையும் அமுதம்பெற்றிழந்த அறிவிலாதவனையும் நிகர்த்தோமே!" என்று துன்புற்றும் மயங்கினின்று, பின்பு "ஓகோ! இங்குள்ள சிறப்புக்க

ளையெல்லாம் அருட்பெருமானே தனித்தனிவிளக்கி அருள ப்பெற்றோம்; நமக்கு என்ன்குறை." எனத்தெளிந்தனர், அதன்பின்னர் பொன்முகரியிலே ஸ்நானஞ்செய்து, திருவெண்ணீறணிந்து, உருத்திராக்கவட[illegible]ப்புனைந்து, பஞ்சாக்ஷரங்களையுச்சரித்து, நியமப்படி ஞானவந்தாதியைப் பாராயணஞ்செய்துகொண்டு, சந்நிதியையடைந்து, நமஸ்கரித்து, பிரதக்ஷிணஞ்செய்து, அளவிடப்படாத அன்பினாலே நடனம் புரிந்து துதித்து, பரவசப்பட்டுநிற்க; பெருமான் திருவருள் கூர்ந்து, அச்சிவலிங்கத்தின்கண்ணே அரிய செவ்வொளியும் மரகதவொளியுமாக அம்பிகையோடு தரிசனந்தந்தளித்து, அவர்களது உழுவலன்பைநோக்கி, திருவுளமகிழ்ந்து, விஷ்ணுவாதிதேவர்கள் வணங்கவும், உமாதேவியார் நாணவும், அவ்விருவரையும் தம்முள்ளே கலப்பித்தருளி, முன்போல வீற்றிருந்தனர். அப்பொழுது, அவர்கள்பின்வந்த தாதிமார்களிருவரும் கடவுளிடத்துச்சென்ற கன்னியர்வந்தாரில்லையே எங்கிருக்கின்றாரென்று தேடித்தியங்கியவழி, "அவர் முத்தியையடைந்தனர். நீங்கள் அவர்கள்பேரால் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்வீராக." என்று அசரீரிவாக்கியமெழ; அது கேட்டு, அவர் கன்னியிலிங்கமென இரண்டு இலிங்கப்பிரதிஷ்டைசெய்து, நற்கதியடைந்தனர். என்று சங்கமேசர் உபதேசித்து, அவ்வரசர் வேண்டுகோளின்படியே சிலந்திமுதலியவைகளின் பூர்வஜன்மசரித்திரங்களைப் புகலத்தொடங்கினார்.

கன்னியர்ச்சருக்கமுற்றிற்று.

## சிலந்தி.

பிரமதேவர் படைத்தற்றொழிலை நடத்திக்கொண்டிருக்கவும், விசுவகன்மனது கண்ணிலுதித்த மாதவவூறனென்பவன், அப்பிரமதேவரை மதியாது, தானும் உலகங்களைப்படைக்க; அவர் அவன்வரும்படிசிந்தித்து, அக்கணமேவந்துநின்ற அவனைநோக்கிக் கடுங்கோபங்கொண்டு, “நீ [illegible]நூலினையுண்டுபண்ணும் சிலந்தியாகுக” என்றுசபித்தனர். பின்னர் அவன்வணங்கிப் பெரிதும் பிரார்த்தித்தலால், உளங்கனிந்து, “பிள்ளாய், நீ அஞ்சேல்; விமலர்வீற்றிருக்கும் கயாரணியத்திலுள்ள வில்வவனத்தையடைந்து, சிலந்தியாகித் தென்கைலாயப்பெருமானைப்பூசித்து, அருங்கதியடைவாயாக.” என்று அநுக்கிரகிக்க; அம்மாதவவூறன் அவ்வண்ணமே சிலந்தியாகி, ஆலயமமைத்து வழிபட்டு, வினையையொழித்து வீட்டையடைந்தனன்.

## பாம்பு.

பதிப்பொருளின் சத்துவகுணங்களும் பற்பலகோடிசந்திரர்களும் ஒருருவெடுத்தாலொத்த திருக்கைலையிலே, அநேகவிம்பிதங்களோடு நிகரின்றிவிளங்கும் சிவபுரத்திலே, ஒருதினம் எம்பெருமான் சிங்காதனத்திலெழுந்தருளத் திருவுளங்கொண்டு, திருமேனியிலே புலித்தோலாடைமுதலியபுனைந்து, ஆதிசேடன்முதலிய பாம்புகளை ஆபரணமாக அணியும்போது, காளனென்னும்பாம்பைக் காணாது, சிந்தித்துநோக்குங்கால், அது விரகங்கொண்டு மகளிர்[illegible]லைடைந்திருத்தலையறிந்து, அதையழைத்து, “காளனே, நீ கயாரணியத்தையடைந்து பாம்பாகுக.” என்றுபணித்தனர். பின்னரும் கருணையோடுநோக்கி, நீ பாம்பாகியிருக்குங்கால், ஒரு

யானையும் பூசிக்கஎய்தும். அப்பொழுது நீ பகைகொண்டு கொல்ல, இருவரும்மடிந்து முத்தியையடைவீர்.'' என்று கட்டளையிட, அங்ஙனமேஉதித்து, எம்பெருமானை இரத்தினங்களால் வழிபட்டுக்கொண்டிருந்தது.

## யானை.

இருக்குநாளிலே, திருக்கையிலையில் அத்தியென்னும் கணத்தலைவன் சிவபெருமான் சந்நிதிவாயிலையடைந்து, ''யான் பிரானைவணங்க விடுவீராக.'' என்றுரைக்குங்கால், வாயிற்காவலர், ''பெருமான் உமாதேவியும்தானுமாகத் தனித்து வீற்றிருக்கின்றார்; அங்கே செல்லுதலடாது: இங்கேநிற்க.'' என உரைக்கவும், கேளாது உட்சென்றனன். அம்பிகை முனிந்து, ''அத்தியே, நீ யானையாகுக.'' என்று கட்டளையிட்டு, பின்னரும் அக்கணநாதனது பிரார்த்தனைக்கிரங்கி, ''நீ கயாரணியத்திலே, யானையுருக்கொண்டு தென்கைலாயப்பெருமானை வழிபடுங்காலத்திலே, நினக்கும் அப்பரனைவழிபடும் ஓர்பாம்புக்கும் பகைமைநிகழ; இருவரும்மடிந்து, முத்தியையடைவீர்: செல்க.'' என்று ஆஞ்ஞாபிக்க, அக்கணநாதன் அவ்வாறே யானையாகி, திருமஞ்சன பத்திரபுஷ்பாதிகளாற் பெருமானைவழிபட்டு, பாம்போடு முத்தியையடைந்தனன்.

## கண்ணப்பநாயனார்.

பாண்டவர்களுக்குள்ளே அருச்சுனனென்பவன், துரியோதனன்முதலிய பகைவரைவெல்லும்பொருட்டு, பரமனைவேண்டிப் பாசுபதாஸ்திரம்பெறவிரும்பி, இந்திரநீலமலையையடைந்து, சுனைநீராடி, மடியுடுத்து, வெண்ணீறணிந்து, உருத்திராக்கமணிபுனைந்து; ஐந்தெழுத்தையுமுச்சரித்து,

நியதிரூடித்து, வேறுதனியிடத்தையடைந்து, உரிய ஒரு ஆசனத்திலேதங்கி, பிராணவாயுவை இடைகலைபிங்கலையின்வழிச்செல்லாது சுழுமுனைவழியாகச்செலுத்தி, ஆறுதாரங்களையுங் கடந்து பிரமரந்திரத்திலேவிளங்கும் ஜோதிசொருபத்தில் மனத்தைலயப்படுத்தி அருந்தவம் புரிந்துகொண்டிருந்தனன். இங்ஙனமிருக்குங்கால், இவனைக்கொல்லுதற்பொருட்டுத் துரியோதனனாலேவப்பட்ட மூகாசுரனென்பவன், கொடிய பன்றியுருக்கொண்டு, அக்காட்டிலுள்ள முனிவர்முதலியோர்க்குக் கடுந்துயர்விளைத்துக்கொண்டிருக்க; சிவபெருமான் அர்ச்சுனனுக்கு ஆபத்துவிளையாவண்ணம் அதனைமடிக்கத் திருவுளத்திலுன்னி, ஒரு வேடவுருக்கொண்டு, புலித்தோலுடுக்கி, உடைவாள்செருகி, கவடி குன்றி சங்கமணி ஆத்தி கொன்றைமுதலிய மாலைகள்புனைந்து, அம்புத்தூணியை முதுகிலேகட்டி, வில்லம்புகைக்கொண்டு, தமக்கியைய அவ்வேடவுருவெடுத்த அம்பிகையோடு, அக்காட்டையடைந்து, அப்பன்றியைநெருங்கி, ஒரு திருவிளையாடலாக ஒரு கூரியகணையை மெல்லவிடுத்தனர். அதுபடுதலும், அப்பன்றியஞ்சி, மேகம்போலப் பெரிதுமுழங்கி மறைந்து, முனிவரிருக்குமிடத்தையணுக; அவர்கள்பயந்து, மெய்வெயர்க்கவோடி, விஜயனையடைந்தனர். அவனெழுந்து வில்லம்புகைக்கொண்டுசென்று, தன்னையெதிர்த்த அப்பன்றிமீது கடுங்கணையொன்று தூண்டி, பூமியிலே வீழ்விக்க; அத்தருணத்திலே அதைத்தொடர்ந்துவந்த சிவபிரான் சமீபித்து, இப்பன்றியை "யான்மடித்தனன்" என்றுகூறினர். அருச்சுனன் பிரானைநோக்கி, "வேடனே, நின்பாணம் இதையுருவும் ஆற்றலுடையதோ? யான்விடுத்தபாணம் உருவிமடியச்செய்ததுகண்டும், பயனற்றவார்த்தை பேசுகின்றாய்; இனி

வில்லைக்கைக்கொண்டு விரையச்செல்வாயாக." என்றுரைக்க; இவ்வண்ணம் வாதிடுதலால் கலகம்விளைந்தது.

இருவரும் கணைகளைப்பொழிந்து யுத்தஞ்செய்யுங்கால் அர்ச்சுனன்சினந்து, தனது நாணற்றவில்லைக்கொண்டு அதிர்த்துத்தாக்க; அவ்வடி சராசரங்களெல்லாம் படும்படி அடியவர்களுக்கெளியராகிய பெருமானும் திருமுடியிலேற்றருளி. உடனே விஷ்ணுவாதிதேவர்கள் அரகரவென்று கரங்குவித்து [illegible] உமாதேவியாரோடு இடபவாகனருடராய்க்காக்ஷிதந்தருளினார். அர்ச்சுனன் கண்களிக்கக்கண்டு, மெய்நடுங்கி வெயர்த்துச்சோரவும், உள்ளிருந்தெழுந்த அன்பின் பெருக்கம்போலக் கண்ணீர் பெருகவும், பலமுறைவீழ்ந்து நமஸ்கரித்தெழுந்து, மயங்கிநின்று, பின்னர்த்தெளிந்து "ஐயனே, சிறியேன்செய்த பிழையைப்பொறுப்பது தேவரீர் திருவருளுக்குக் கடமையாகும்." என்று பிரார்த்தித்தனன். பெருமான் திருவருள்சுரந்து, "மைந்தனே, அஞ்சேல் நீ கூறியமொழியனைத்தும் நமது குமாரனதுமொழிபோல் அங்கீகரித்தனம்: உனக்கு வேண்டும்வரம் யாது? விண்ணப்பிப்பையேல், தந்தருளுவேம்." எனவினவ; பார்த்தன் பத்தியிற்பணிந்து, "அத்தனே, வெந்துயர்ப்பிறவியால் மிகவு மெலிந்தனன்; இனி வீட்டினையருள்க." எனவேண்டிக்கொண்டனன். முதல்வனார் தனஞ்சயனே, நீ பகைவரையழிக்கப் பாசுபதாஸ்திரத்தைவிரும்பித் தவம்புரிந்தாயாதலின் முன்னர் அதனைப் பெற்றுக்கொள்வாயாக." என்று கைக்கொடுத்து, பின்பு "நம்மை வேடனென்று [illegible] கூறினையாதலால் நீவேட்டுவ அரசனாகி, தென்கைலையைச்சார்ந்து, அன்பே உருவமாகி, வேறுசிந்தனையின்றி, நாகலிங்கத்தை நன்குபூசித்து, பன்றிமுதலிய விலங்குகளின் தசை[illegible] ப

ந்துஉண்பித்து, வாழ்நாளிலே, முத்தியைத்தந்தளிப்போம்." என்றுரைத்து, மறைந்தருளினார். அவ்வாறே அர்ச்சுனனும் திண்ணனாராக அவதரித்து, திருக்காளத்தியப்பனைப் பூசித்து, சிவகதியடைந்தனன்.

ஆதலால், இத்தலம் யாவர்க்கும் இகபரமோக்ஷங்களைப்பாலித்து, எத்தலங்களினும் சிறந்ததாகி, உலகிற் சிவபுரமெனவிளங்காநின்றது. என்று சங்கமேசருபதேசித்தருள; யாதவமகாராஜாகேட்டு, பேரானந்தமடைந்து, "எம்பெருமானே, தேவரீர் என்னையொருபொருளாகக்கருதி இவ்வற்புதசரித்திரங்களையெல்லாம் இசைத்தருளினீர்; யான் எத்தவம்புரிந்தேன்." என்று திருவடிகளைச் சிரமேற்சூடிக்கொண்டு, கைகட்டி எதிரேநிற்க; சங்கமேசர் அரசனைநோக்கி, "நீ காளத்தியையடைந்து, நம்பெருமானுக்குத் தக்கபடி ஓராலயமியற்றுவாயாக." என ஆஞ்ஞாபித்து, மறைந்தருளினார். அதுகண்ட அரசர்பெருந்தகை அத்தியந்த ஆச்சரியத்துடன் திக்குநோக்கிப் பலமுறைநமஸ்கரித்து, இச்சனனமே நற்சனனமெனக் களிகூர்ந்து, பின்பு "ஆ ஆ எம்பெருமானே, சங்கமவுருவந்தாங்கி எழுந்தருள இம்மங்கை என்னதவம்புரிந்தாள்." என்றுவியந்து, அக்கலந்திருத்தும் பெண்ணை வணங்கி, ஆடையணிமுதலிய அனைத்தையுநல்கி, "அன்னையே, நீ இன்றுமுதல் முந்தியகுற்றேவலைவிடுத்து அரியசெல்வங்களை அனுபவித்துக்கொண்டு வாழ்வாயாக." [illegible]று [illegible]குத்தனர். மறுதினத்திலே, நால்வகைச்சேனைகளும் புடைசூழ்ந்துவர சிவிகையிலேறி, கயாரணியத்தை[illegible]டைந்து, நாகலிங்கப்பெருமானைத் தரிசித்து, அப்பெருமானுக்கும், ஞானப்பூங்கோதையம்மைமுதலிய மூர்த்திக

ளுக்கும், கர்ப்பக்கிருகம் அர்த்தமண்டபம் மஹாமண்டபம் மதில் கோபுரம் துஜஸ்தம்பம் பலிபீடமுதலியவைகளைத் து க்கபடியமைத்து, பஞ்சமூர்த்திகளுக்கும் இரதம் வாகனம் ஆபரணாதிகளையும்வகுத்து, பொன்முகரிநதியையொதுக்கி, நகரமும் நகரில்லாமலுண்டாக்கி, ஆலயத்திற்கு நித்தியநைமித்திகங்களையும் திருவிழாவையும் நியமித்துநடாத்தி, சிலநாளரசாண்டிருந்து, திருக்காளத்திநாதருடைய திருவடிநிழலையடைந்தனர்.

சிலந்திமுதலமுற்கதைச்சருக்கமுமற்றிற்று.

---

## யாதவமன்னர்வணக்கம்.

கதியிலிபொற்கல்லாவின் கீழ்வதிந்த கண்ணுதற்கு
மதிதவழ்பொற் கோபுரமு மணிமதிலு மண்டபமு
முதுசுடர்மா மாளிகையு முதலாய மற்றெவையும்
விதிமுறையி யமைத்தளித்த யாதவவேந் தினபணிவாம்.

---

வையகமுழு தும்வாழ்கமாதமும்மாரிபெய்க
செய்யகோலரசன்செய்கதிருவறஞ்செய்வோரோங்க
தையலோர்பாகனன்பர் தரணியின்மிகவுமோங்க
வையனுகமநூல்கூறமருந்தவர்வாழ்கமிக்கே.

திருச்சிற்றம்பலம்.

சீகாளத்திமான்மியம்முற்றுப்பெற்றது.